
# உணர்வூட்டும் உபதேசங்கள்



ஆக்கம்.


மௌலவி. ஏ. எல். முஹம்மது அஷ்றப் (ஷர்கி)

B.A. (Hons) S.L. Dip-in. Edu. S.L.

பள்ளிக்குடியிருப்பு,

அக்கரைப்பற்று,


ஸ்ரீ லங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வூட்டும் உபதேசங்கள்



அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு ஜம்ஆ பள்ளிவாயலின் முகப்புத்தோற்றம்.

ஆக்கம்.

மௌலவி. ஏ. எல். முஹம்மது அஸ்றப் (ஷர்கி)

B.A. (Hons) S.L. Dip-in. Edu. S.L.

பள்ளிக்குடியிருப்பு,

அக்கரைப்பற்று,

ஸ்ரீ லங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title :- Unarvooddum Upathesangal.

Author :- Moulavi. A.L Muhammathu Ashraff. (Sarki)
(B.A. Hons. S.L. Dip - in Edu . S.L)
Akkaraipattu,
Sri Lanka.

Printer. :- Rimarz Auto Offset.
Bank of Ceylon Road,
Akkaraipattu - 02.

First Edition :- 12, Rabiul Awwal 1420.
(1999. 06.27)

Copyright :- ® Author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யா அல்லாஹ்!

என்னை வளர்த்து ஆளாக்கி

அறிவூட்டி வழி காட்டிய

என்னுயிர்த் தந்தை;

முஹம்மது தம்பி

ஆதம்லெப்பை

அவர்களினதும்,

என் அன்புத் தாய்

மீரா சாஹிபு

மரியம் பீவி

அவர்களினதும்

பிழை பொறுத்து

கிருபை செய்து

சுவனத்தை

அருள்வாயாக !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் முதல்வர்.

### மௌலவி அ. கா. முஹம்மது (பாகவீ) அவர்களின

## ஆசிச் செய்தி

"வாழ்க்கையென்பது நாமாகத்தேடிக்கொண்டதல்ல, நாம் எப்படியும் வாழலாம் என்பதற்கு. நம்மைப் படைத்தவன் நமக்கு ஏற்படுத்தித்தந்தது அது. எனவே அவன் இஷ்டப்படிதான் வாழ்க்கையே தவிர, நம் இஷ்டப்படியல்ல."

அறிஞர் சஅதியின் மேற்படி கூற்று எவ்வளவு தத்ரூபமானது என்பதற்கு; எனது நண்பர் மௌலவி. அல்-ஹாஜ். ஆ.லெ. முஹம்மது அஸ்றப் ஷாகி (B.A.) அவர்கள் எழுதியிருக்கும் இந்நூல் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பலஸ்தீன முஸ்லிங்களுக்காக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்துகின்ற நாம், நமது அண்டை வீட்டு முஸ்லிமின் தியானத்துக்கு - தொழுகைக்கு நமது வானொலி, தொலைக்காட்சி போன்றவைகளால் இடையூறு ஏற்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய சகோதரத்துவத்தை எவ்வளவு தூரம் கொச்சைப்படுத்துகிறோம் என்பதை உணர்ந்து கொள்வதற்கு இந்நூலில் வரும் "இசை, பாடல்கள் பற்றி இஸ்லாம்" என்னும் தலைப்பொன்றே ஒரு முஸ்லிமுக்குப் போதுமானதாகும்.

ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அல்லாஹ்வோடு இருக்கும் நெருக்கம் இறுக்கமாக இருக்க வேண்டுமென்ற உள்ளக்கிடக்கையோடு எழுதப்பட்டிருக்கும் இந்நூல், சீர்கெட்டுக்கிடக்கும் உள்ளங்களுக்கு சிறந்ததொரு ஔடதமாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

நூலாசிரியரின் முயற்சியை அல்லாஹ் பொருந்திக்கொள்வதோடு அதற்குரிய நற் கூலியையும் வழங்கியருளப் பிரார்த்திக்கின்றேன்.

**மௌலவி. அ.கா. முஹம்மது பாகவீ**
*அதிபர்,*
*கிழக்கிலங்கை அரபிக்கல்லூரி,*
*அட்டாளைச்சேனை - 04.*
*1999 - 07 - 12.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை.

உறாமிதன் லில்லாஹி, வமுசல்லியன் அலன்னபி அம்மா ப∴து. எல்லாம் வல்ல அல்லாஹு"வை புகழ்ந்து, நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத்து கூறிய பின்,

அல்- ஹாஜ். மௌலவி. ஏ.எல்.எம்.அஸ்றப் (பிஏ) அவர்களால் எழுதப்பட்ட ''உணர்வூட்டும் உபதேசங்கள்'' எனும் நூலை நான் பார்வையிட்டேன். பல முக்கிய விடயங்களையும், சமூக வளர்ச்சி, எழுச்சி ஆகியவைகளை கொண்டதாகவும் உள்ளன. ஒரு இஸ்லாமிய சமூகம் எவ்வாறு உருவாக வேண்டும். எச் சூழலில் உருவாக வேண்டும், இறையச்சம்(தக்வா) செயல் (அமல்) ஆகியவைகளை உள்ளடக்கியதாகவும், இந்நூல் எழுதப்பட்டுள்ளன.

எனவே இந்நூலை ஒவ்வொருவரும் வாசித்தால் நல்ல பயனை அடைவதோடு, நல்ல சிந்தனையையும் பெறலாம் என உறுதி கொள்கின்றேன். அல்லாஹ் இந்நூல் ஆசிரியரின் முயற்சியை கபூல் செய்வதோடு சிறியவர், பெரியவர் இந்நூலை வாசித்து, பயன் பெற அல்லாஹ்வை நான் பிராத்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்.

இ∴து
ஐ. எம். அபுபக்கர் (ஷர்கி)
*தலைவர்,*
*ஜம்யத்துல் உலமா சபை,*
*அக்கரைப்பற்று - 03.*
*1999. 07. 13.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

*அல்ஹம்து லில்லாஹ் அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றசூலில்லாஹ், வஅலா ஆலிஹி, வசஹ்பிஹி அஜ்மஈன்*

*''புகழனைத்தும் வல்ல அல்லாஹ்வுக்கே''*

இஸ்லாம் இனிமையானது.
ஈருலக வாழ்விற்கும் இனியவழிகாட்டுவது.
படைத்த அல்லாஹ்வால் பாருலக மக்களுக்கு வழங்கப்பட்ட வழி முறை.
இறுதித்தூதர் இறைநேசர் ஏந்தல் நபியால் வாழ்ந்து காட்டிய வழிமுறை.

எனினும் எமது சமூகத்தில் காணப்படுகின்ற சில பழக்க வழக்கங்கள் செயல்முறைகள் என்பன இஸ்லாமிய செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டுச் செல்வதனை அவதானிக்கின்றோம். அதனைச் சுட்டிக்காட்டி சமூகத்தை நேரான நன்னெறியின் பக்கம் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு அதனைப்பற்றித் தெரிந்து கொண்ட ஒவ்வொருவருக்குமுரிய தலையாய கடனாகும். அந்த வகையில் சில முக்கிய விடயங்களைமட்டும் தொகுத்தளிக்கப்படுவதே இச்சிறு நூலாகும். குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடனும், நேர்வழிநடந்த முன்னோர்களின் அறிவுரைகளிலிருந்தும் பொறுக்கித் தொகுக்கப்பட்ட இந் நூலிலிருந்து அனைவரும் பயன்பெற வேண்டுமென்பதே என்பேரவா.

எமது வாழ்வில் நாம் விடுகின்ற தவறுகள் சமூகத்தில் பாரதூரமான விளைவுகளை உருவாக்கி விடுவதோடு, மனிதனை இஸ்லாத்தின் எல்லைக் கோட்டிற்கு அப்பால் நகர்த்தி விடுகின்றது. நவீன விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ள இக்கால கட்டத்தில் அன்னியர்களின் கலாசாரப்பாரம்பரியங்கள் எமது வாழ்வில் ஊடுருவி எம்மையும் எமது எதிர்கால சந்ததியினரையும் வழி கெடுக்கக் கூடிய ஆபத்தான சூழல் எம்மத்தியில் காணப்படுகிறது. ஒரு பறம் புத்தகங்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன அறிவை வளர்க்கும் ஊடகங்களாகக் கொண்டாலும், மறு புறம் தரக்குறைவான சஞ்சிகைகள், தரமற்ற நிகழ்ச்சிகள் தரமற்ற மட்ட ரகமான சினிமாப் பாடல்கள், படங்கள் என்பன பணத்தை மட்டும் இலக்காகக் கொண்டு வெளிவருவதனால் இவைகள் எமது சமூதாயத்தைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இக்கால கட்டத்தில் எம்மையும், எம் சமூகத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது கற்றறிந்தோரின் கடமைப்பாடாகும். மனிதனிடத்தில் அறிவு வளரும் போது அவனிடத்தில் ஆன்மீக முதிர்ச்சியும், அனைத்திலும் அல்லாஹ்வுக்கு அடிபணிகின்ற தன்மையும் மேலோங்கிக் காணப்பட வேண்டும். எம் சமூக அமைப்பைப் பொறுத்த மட்டில் அது மிகவும் ஆழ்ந்து நோக்க வேண்டிய ஒரு விடயமாகும். இன்று எமது குடும்ப அமைப்புக்களில் கூட பல வெடிப்புக்கள், ஓட்டைகள் ஏற்பட்டுள்ளன. இதற்குக் காரணம் பெற்றார், பிள்ளைகளுக்கிடையே உள்ள பொறுப்புக்கள் உணரப்படாமையேயாகும்.

எனவேதான், இது ஒரு சிறு நூலாக இருப்பினும் சமூகத்தில் ஒரு பெரும் சீர் திருத்த மாற்றத்தினை உருவாக்குவது வாசகர்களாகிய உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. இதற்கு நீங்கள் கொடுக்கும் மதிப்பு இதிற் காணப்படும் நற் கருத்துக்களை எடுத்து நடப்பதும், பிறருக்கு எத்திவைப்பதுமாகும்.

வல்ல அல்லாஹ் எம் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக.

அல்ஹம்துலில்லாஹ்.

ஆசிரியர்

**அன்புடன். ஏ.எல். முஹம்மது அஸ்றப்**

*12. றபியுல் அவ்வல் 1420. - 27-06-1999.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01) நாம் எமது குழந்தைகளை வளர்ப்பது எப்படி?
- அ) தொழுகையைக் கற்றுக் கொடுத்தல்.
- ஆ) விலக்கப்பட்டவைகளை விட்டுவிடுமாறு எச்சரித்தல்.
- இ) ஆடை அணிதல்.
- ஈ) நற்குணங்களும், நற்பழக்கவழக்கங்களும்.
- உ) வீரமும், தியாகமும்.
- ஊ) பெற்றோருக்கு நன்றி பாராட்டுதல்.

02) பெரும்பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

03) அல்லாஹ்வின் பாதையில் செய்யப்படும் ஜிஹாத்.

04) அல்லாஹ்வின் உதவிக்கான வழி.

50) தாடி வைத்தல்.

06) இசை, பாடல் பற்றி இஸ்லாம்.

07) உருவப்படங்கள், சிலைகள் விடயத்தில் இஸ்லாத்தின் தீர்வு.

08) புகைத்தல் தடுக்கப்பட்டதா?

09) போதைப்பொருட்களின் விபரீத விளைவு.

10) அல்-குர்ஆனின் அற்புதப் பயன்கள்.

11) அண்ணல் நபியின் அழகிய நற்குணங்கள்.

12) சிறிய கிராமத்தின் புதிய மத்ரசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் எமது குழந்தைகளை வளர்ப்பது எப்படி?...

''விசுவாசிகளே! உங்களையும், உங்களுடைய குடும்பத்தினரையும் (நரக) நெருப்பை விட்டும் நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதனுடைய எரிபொருள் மனிதர்களும், கற்களுமாகும்'' (66 - 6)
(சூறத்துத் தஹ்ரீம் - 6)

பெற்றாரும், ஆசிரியரும் பிள்ளைகளை வளர்த்தெடுக்கும் விடயத்தில் மிக முக்கிய பங்கெடுக்கின்றனர். அல்லாஹ்விடத்தில் இவ்விடயம் பற்றிய விசாரணைக்குரியவர்கள். இவர்கள் தம் கடமைகளைச் சீராக நிறைவு செய்தால் இவ்வுலகிலும், மறுவுலகிலும் பிள்ளைகள் ஈடேற்றம் பெறுவார்கள். இவர்கள் தம் கடமைகளைச் சீராகச் செய்து முடிக்காமல் அலட்சியம் செய்தால் பிள்ளைகள் சீர்கெட்டு விடுவார்கள். இதற்கான முழுப் பொறுப்பும் பெற்றோரையும், ஆசிரியரையும் சாரும். இதுபற்றி காருண்ய நபியவர்கள்.

நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். ஒவ்வொருவரும் தமது மேய்ப்புக் களைப் பற்றிக் கேட்கப்படுவீர்கள். (புகாரி முஸ்லிம்)

ஆசிரியர்களே!................
உங்களுக்கு சுபசோபனம் நபியவர்கள் பொன்மொழியில் உங்களுக்கோர் மேலான ச[illegible]ணியம் இருக்கின்றது.

''அல்லாஹ் மீது ஆணையாக ஒரு மனிதன் உங்கள் முயற்சியினால் நேர்வழி பெறுவது உங்களுக்கு ஒரு சிவப்பு ஒட்டகை கிடைப்பதை விட மேலானது'' (புகாரி முஸ்லிம்)

பெற்றார்களே! நபியவர்களின் பொன் மொழியில் உங்களுக்குமோர் சுபசோபனமுண்டு. ஒரு மனிதன் மரணித்து விட்டால் அவனுடைய அமல்கள் அவனை விட்டும் துண்டிக்கப்பட்டு விடுகிறது. மூன்று விடயங்களைத் தவிர.

01. நிரந்தரமான தானதர்மம் (சதகதுல் ஜாரியா).
02. பயன் பெறக் கூடிய கல்வி.
03. அவனுக்காக துஆச் செய்யும் சாலிஹான குழந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைச் சீராக வளர்க்கும் பொறுப்புடைய பெற்றோர்களே! நீங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக உங்களைச் சீர்படுத்துங்கள். உங்கள் வார்த்தைகள், பழக்க வழக்கங்கள், குணங்கள் என்பனவற்றை அழகாக்கிக் கொள்ளுங்கள். உங்களது நற்செயல்கள்தான் குழந்தைகளுக்கான முன்மாதிரி. உங்கள் பிழையான நடத்தைகள் குழந்தைகளை வழிகெடுத்து விடும். குழந்தைகளுக்கு முன் பெற்றோரும், ஆசிரியர்களும் நடந்து கொள்ளும் அழகான நடத்தைதான் அவர்களுக்கான முக்கிய பயிற்சியாக அமையும்.

01. உங்கள் திருமணங்களை மார்க்க முறைப்படி ஹலாலாக அமைத்துக் கொள்ளுங்கள். (மணமகன், மணமகள், வலி, சாட்சிகள், ஈஜாப், கபூல் என்பன சரியாக உள்ளதா என்பதனை அவதானித்துக் கொள்ளுங்கள்.) உங்கள் திருமணம் சீராக, சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடைபெறா விட்டால் பிறக்கின்ற குழந்தை தவறான வழியில் பிறந்து விடும்.

02. குழந்தை பிறந்ததும் அதன் வலது காதில் (பாங்கும்) அதானும், இடது காதில் இகாமத்தும் சொல்லி ஊதுங்கள். உலகுக்கு வந்த குழந்தை முதல் வார்த்தையாக அல்லாஹ்வின் பெயரைக் கேட்கட்டும். வாயில் ஏதாவது இனிப்புப் பதார்த்தங்களை வையுங்கள்.

03. குழந்தை பிறந்து 7வது நாளன்று குழந்தையின் தலைமுடியை நீக்கி அதன் நிறையின் அளவு தங்கம், அல்லது வெள்ளியை ஸதகாவாகக் கொடுங்கள். வசதியிருந்தால் குழந்தைக்கு அகீகாக் கொடுக்க மறந்து விடாதீர்கள்.

04. குழந்தைகளுக்கு நல்ல கருத்தைப் பொதிந்துள்ள அழகான பெயரை வையுங்கள். பொருள் தெரியாத நவீன சொற்றொடர்களில் பெயர் வைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உதாரணமாக, பாசிக் - கெட்டவன், மஜ்னூன் - பைத்தியக்காரன்.

05. குழந்தைகளுக்கு ஹலாலான உணவையே ஊட்டுங்கள்.

06. பிள்ளைகள் பேச ஆரம்பித்தால் அல்லாஹ், முஹம்மத் என்ற வார்த்தைகளை, "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் றசூலுல்லாஹ்" என்ற கலிமாவையும் கற்றுக் கொடுங்கள். கருத்தை விளங்கிக் கொள்ளும் பருவம் வந்தால் அதன் பொருளை விளக்கிவையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பிள்ளையின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீது ஆழமான அன்பை விதைத்து விடுங்கள். அல்லாஹ் மீதும், றஸூல் மீதும், இறுதி நாள் மீதும் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். இன்னும் எம்மைப்படைத்தவன், பாதுகாப்பவன், உணவளிப்பவன், நோயைக் குணப்படுத்துபவன், கஷ்டத்திலிருந்து விடுவிப்பவன் அல்லாஹ் தான் என்ற அசையாத நம்பிக்கையை உருவாக்கி விடுங்கள். அல்லாஹ் தனித்தவன், இணை, துணை அற்றவன் அவனே வணங்குவதற்குத் தகுதியானவன் என்பதனை அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருங்கள்.

08. சுவர்க்கத்தின் மகிமையைக் கூறி பிள்ளைகளுக்கு அதன் மீது ஆசையூட்டுங்கள். அதனை அடைந்து கொள்வதற்கு வழிகாட்டுங்கள். தொழுது, நோன்பு நோற்று, பெற்றோருக்கு வழிபட்டு, நற்கருமங்களில் ஈடுபட்ட, நற்குணமுடையவர்களுக்கே சுவனம் கிடைக்கும் என்பதனையும் உணர்த்துங்கள். நரகத்தைப் பற்றியும் அதன் கெடுதிகள், துன்பங்கள், துயரங்கள் பற்றியும் எச்சரிக்கை செய்யுங்கள்.

தொழுகையை விட்டோரும், பெற்றோருக்கு மாறு செய்வோரும், மற்றவர்களின் பொருளைத் தவறான வழியில் உண்போரும் அல்லாஹ்வின் வெறுப்புக்குரியவர்கள். என்பதனைக் கூறி வையுங்கள். பொய் பேசுவது, களவெடுப்பது, வட்டிகொடுப்பது, வட்டி உண்பது, லஞ்சம் வாங்குவது இது போன்ற செயல்கள் நரகம் செல்வதற்குக் காரணமாகிவிடும் என்பதனை உள்ளத்தில் பதிய விடுங்கள்.

09. பிள்ளைகள் எதைக் கேட்டாலும் அல்லாஹ்விடத்தில் கேட்பதற்குப் பழக்குங்கள். பாதுகாப்பு வேண்டும் போது அல்லாஹ்விடத்தில் கையேந்திக் கேட்பதற்கும் கற்றுக் கொடுங்கள். ஏனெனில் நபியவர்கள் தனது சிறிய தந்தையின் மகனுக்கு கற்றுக் கொடுத்த வார்த்தைகள் வருமாறு.

"நீ கேட்டால் அல்லாஹ்விடத்தில் கேள். நீ உதவி கோரினால் அல்லாஹ்விடத்தில் தேடு" (திர்மிதி)

**வேதனை வரும் வழி**

எந்தப் பகுதியில் விபச்சாரம், வட்டி என்பன பகிரங்கமாக நடை பெறுகின்றதோ அப்பகுதி மக்கள் அல்லாஹ்வின் வேதனையை தம்மீது இறக்கிக் கொள்கின்றார்கள் என கருதிக்கொள்ளட்டும். (ஆதாரம் - தர்கீப்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழுகையைக் கற்றுக் கொடுத்தல்.

01. குழந்தைகளுக்கு சிறு பராயத்திலிருந்தே தொழுகையின் விதிகள், செயல் முறைகள் போன்றவற்றைக் கற்றுக் கொடுங்கள். அது உங்கள் மீது கட்டாயக் கடனாகும். அப்போதுதான் அவர்கள் பெரியவர்களாக வளரும் போது அவற்றைக் கடைப்பிடித்தொழுகும் தன்மை பெறுவர். ஏனெனில் இது பற்றி பின்வருமாறு ஏவினார்கள்.

''உங்கள் பிள்ளைகள் ஏழு வயதை அடைந்தால் தொழுகையை ஏவுங்கள். பத்து வயதை அடைந்தால் (அப்போதும் தொழாமல் இருந்தால்) அவர்களை அடியுங்கள். அவர்களைப் படுக்கையில் பிரித்து வையுங்கள். (அஹமத்) பிள்ளைகள் பத்துவயதை அடைந்தால் ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் ஒழுங்கு செய்து கொடுங்கள். மேற் கூறப்பட்ட நபி மொழி இதற்கு ஆதாரமாக அமைகின்றது. வுழுச் செய்வதும், தொழுவதும், குர்ஆன் ஓதுவதும் அவர்களுக்கு முன்னால் இடம்பெறுவது ஒரு சிறந்த பாடமாக அமையும். பள்ளி வாசலுக்கு செல்லும் போது உங்கள் ஆண் பிள்ளைகளை அழைத்துச் செல்வதுடன், தொழும் ஒழுங்கு முறைகள் பற்றிய புத்தகங்களைப் பார்ப்பதற்கு ஆர்வமூட்டுங்கள். குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தொழுகை பற்றிய சட்டதிட்டங்களைக் கற்றுக் கொடுங்கள். இது பெற்றோர் மீதும், ஆசிரியர்கள் மீதுமுள்ள பொறுப்புக்களாகும். இதில் நீங்கள் தவறிழைப்பின் நிச்சயமாக அல்லாஹ்விடம் நீங்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்".

02. பிள்ளைகளுக்குக் குர்ஆனைக் கற்றுக் கொடுங்கள். ஆரம்பமாக சூறத்துல் பாத்திஹா (ஹம்து) வையும் தொடர்ந்து சிறியசூறாக்களையும், தொழுகைக்கான அத்தஹிய்யாத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள். குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஓதுவதற்கும் முக்கியமானவற்றை மனனமிட்டுக் கொள்ளவும் ஏனையமார்க்க விடயங்களையும், விதிமுறைகளையும் கற்றுக் கொள்ளவும், நபியவர்களின் பொன் மொழிகளை அறிந்து கொள்ளவும், சிறந்த ஆசிரியர்களை உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள். அரசாங்கப் பாடசாலைகளில் அல்லது தனியார் கல்வி நிலையங்களில் கல்விபயிலும் பிள்ளைகளுக்கு எத்தனை சிரமங்கள், முயற்சிகள் மேற்கொள்கின்றீர்களோ அதை விட ஒரு படி மேலாக அல்லாஹ்வின் கலாம் அல்-குர்ஆனையும், ஹதீதையும், மார்க்கத்தின் அடிப்படை விடயங்களையும் கற்றுக் கொடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள். குர்ஆன் மத்ரசாவுக்கு உரிய நேரத்திற்கு ஒழுங்காக ஆடையணிந்து சென்றுவருவதனையும் கவனியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. உடை விடயத்தில் உரிய கவனம் செலுத்தத் தவறாதீர்கள். அழகான அச்சு அமைப்புள்ள குர்ஆனை வாங்கிக் கொடுத்து அதனைச் சுத்தமாக, கவனமாகச் சுமந்து செல்வதற்கு (பேக்)கைப்பை ஒன்றையும் வாங்கிக் கொடுங்கள்.

குர்ஆனைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களைக் கௌரவித்து அன்பளிப்புக்கள் வழங்கி உற்சாகப்படுத்துங்கள். அப்போதுதான் உங்கள் குழந்தைகள் சிறந்த அறிவைப் பெறுவார்கள். ஏனெனில் நபியவர்கள் குறிப்பிடும்போது, ''உங்களில் மிகச்சிறந்தவர்கள் குர்ஆனைக் கற்றுக் கொண்டவர்களும், பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர்களும்'' எனப் போதித்தார்கள். குர்ஆன் ஓதாமல் புறக்கணித்து விடுவோர் பற்றி அருள் மறை அல்-குர்ஆன் கடுமையாக எச்சரிக்கை விடுத்திருப்பதனை மறந்து விடாதீர்கள்.

''எவன் என்னுடைய நல்லுபதேசங்களைக் புறக்கணிக்கின்றானோ நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையுண்டு. (அன்றியும்) கியாமத்து நாளில் அவனைக் குருடனாக எழுப்புவோம். (அப்போது) என்னுடைய றப்பே! என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்? திட்டமாக (உலகில்) நான் பார்வையுள்ளவனாக இருந்தேனே? என்று அவன் கேட்பான் அவ்வாறுதான்! நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன. அவற்றை நீ புறக்கணித்தாய் அவ்வாறே இன்று நீ புறக்கணிக்கப் படுகின்றாய்'' என்று (அல்லாஹ்) கூறுவான்.

(20 - 125, 126).

பிள்ளைகளைக் குர்ஆனை மனனம் செய்து ''ஹாபிழ்'' ஆக்கிவிட்டால் அவருடைய தகுதி அல்லாஹ்விடத்தில் மிகவும் உன்னதமானது. அவர் நரகம் செல்ல வேண்டிய பத்து நபர்களை சுவர்க்கத்திற்கு அழைத்துச்செல்லும் பெரும் பேறு பெறுகின்றார்.

எனவே, நீங்கள் பிள்ளைகளுக்கு குர்ஆனோடு இறுக்கமான தொடர்பை உண்டாக்கி விடுங்கள். அது தான் எமது வழிகாட்டி. ஒளி விளக்கு. உடல் நோய்க்கும், உள நோய்க்கும் அருமருந்து. வல்ல அல்லாஹ் எம்மோடு உரையாடும் கலாம். இதனை நீங்களும் ஓதுங்கள். ஓத வழிகாட்டுங்கள்.

இறுதிநாளன்று இறைவன் மூன்று மனிதர்களைப் பார்க்கமாட்டான்.

01. விபச்சாரம் புரியும் வயோதிபன்.
02. சத்தியத்தைத் தனது முதலீடாக்கியவன்.
03. கர்வம் பிடித்த ஏழை. (ஆதாரம் - ஜாமிஉஸ் சகீர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விலக்கப்பட்டவைகளை விட்டுவிடுமாறு எச்சரித்தல்.**

01. பிள்ளைகள் இணைவைத்தல், திட்டுதல், ஏசுதல், கூடாத வார்த்தைகள் பேசுதல் இவ்வாறான செயல்களை விட்டு விடும்படி அச்சமூட்டி எச்சரிக்கை செய்யுங்கள்.படைத்துப் பரிபாலிக்கின்ற அல்லாஹ்வுக்கு இணைவைப்பது விலக்கப்பட்டதாகும். இது இழிவை உண்டாக்கி மனிதனை நரகில் புகுத்திவிடும் என்பதனை அன்பான வார்த்தைகள் மூலம் விளக்கிவையுங்கள். நீங்களும் அவர்களுக்கு முன்னிலையில் இவ்வாறான அருவருப்பான செயற்பாடுகளிலிருந்து நீங்கி நற்பண்போடு மிகவும் முன்மாதிரியாக நடந்து கொள்ளுங்கள்.

02. பிள்ளைகள் காட்ஸ், டாம், கரம்போட் போன்ற வீணான விளையாட்டுக் களில் ஈடுபடாமல் கவனித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இது சூது விளையாடுவதற்கும் வழியேற்படுத்தி விடுகின்றது. இது போன்றே குண்டுகள் (போளை) அடித்து விளையாடுதல், காசு தெறித்தல், குலுக்குக் கட்டை போன்றனவும் பிள்ளைகளைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றன. இது பகைமையையும், பூசல்களையும் உரு வாக்குகின்றது. அவர்கள் வாழ்வில் இழிவையும், பொருள் அழிவையும், நேர இழப்பையும் ஏற்படுத்துவதுடன், தொழுகையையும் பாழ்படுத்தி விடும். இது போன்றே அதிஷ்ட லாபச் சீட்டுக்கள், டிக்கட் வகைகள், சுரண்டல் டிக்கட்டுக்கள் போன்றனவும் ஹறாமானவை என்பதனை சுட்டிக்காட்டுங்கள். ஒரு மனிதனுடைய பொருள் தவறான வழியில் வந்தடைவதை இஸ்லாம் ஒரு போதும் விரும்பவில்லை என்பதை பிள்ளைகளுக்கு விளக்கிவையுங்கள்.

03. சினிமாச் சஞ்சிகைகள், அரை குறை ஆடையுடனான நிர்வாணப் படங்கள் கொண்ட உருவப் படங்களையும், ஆபாச உணர்வுகளைத் தூண்டும் சினிமாப் பாடல்கள், படங்களையும், கதைகளையும், மோசமான விளம்பரங்கள் போன்றவற்றை விட்டும் பிள்ளைகளைத் தடுத்து விடுங்கள். இது விடயத்தில் நீங்கள் கவனம் செலுத்தா விடின் அவர்களின் எதிர்கால வாழ்வு பாழ்பட்டு, துர்க்குண முள்ளவர்களாகவும் ஆகிவிடுவார்கள்.

04. புகைப்பிடிப்பதன் கேடுகள் பற்றி பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். வைத்தியர்கள் அனைவரும் ஏகோபித்த முடிவாக புகைத்தல் உடல் ஆரோக்கியத்தைப் பாதித்து, புற்று நோய்க்குக் காரணமாக அமைந்துவிடுமென தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமன்றி மனிதனைப் பலவீனப்படுத்தி அவனுடைய ஆயுளைக் குறைத்தும் விடுகின்றது. சிகரட், பீடி, சுருட்டு, போன்ற பொருட்கள் அனைத்தும் மோசமான அருவருக்கத்தக்க வாடையைத் தருகின்றன. அதனைப் புகைப்பவர்கள் பாதிப்படைவது போல், பக்கத்தில் உள்ள மற்றவர்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இவை உடலுக்கு நோயையும், பொருளுக்கு அழிவையும் ஏற்படுத்துகின்றன. இதனால் இவற்றைப் புகைப்பதும், வியாபாரம் செய்வதும் தவிர்க்கப்பட வேண்டியதாகும் எனப் பல சட்ட அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதற்காகச் செலவிடும் பணத்தை பழங்கள், ஆரோக்கிய பானங்கள் அருந்தும் படி பிள்ளைகளுக்கு உபதேசியுங்கள். போதைவஸ்துக்கள் இதை விட பலமடங்கு அபாயம் நிறைந்ததும், விலக்கப்பட்டதுமாகும். போதை மருந்துகள், போதை மாத்திரைகள், போதையூட்டும் ஊசி மூலம் ஏற்றப்படும் மருந்துவகைகள், கொக் கொய்ன், ஹஸீஸ், மர்ஜுவானாஹ், ஹறோயின் போன்றவைகளும், கள், சாராயம்,பிஸ்கி, போன்ற ஏனையவைகளும் மனிதனை நாசப்படுத்தி அழிவில் போடக்கூடியவைகளாகும், எனவேதான் அல்லாஹ் இவைகளை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றான். இவ்வாறான போதைப்பொருட்கள் மனிதனின் உடலையும், உள்ளத்தையும், வாழ்வையும் அழித்து விடுகின்றன என்பதனை தெளிவாக உங்கள் பிள்ளைகளுக்கு உணர்த்தி வையுங்கள்.

இது பற்றி அருள்மறை அல்குர்ஆன் " நபியே! சாரயத்தைப் பற்றியும், சூதாட்டத்தையும், அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். அதற்கு நீர் கூறும் இவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது. மனிதர்களுக்கு பயன்களுமிருக்கின்றன. ஆனால் அவ்விரண்டிலுமுள்ள (தீங்கு) அதிலுள்ள பயனைவிட மிகப் பெரியது" (பகறா-219)

05. பிள்ளைகளைச் சொல்லிலும், செயலிலும் உண்மையாளர்களாகப் பழக்குங்கள். நாமும் பரிகாசத்திற்கேனும் பொய் சொல்லக்கூடாது, நாங்கள் ஏதையும் பிள்ளைகளிடம் வாக்களித்தால் அதைநாம் நிறைவேற்றி விட வேண்டும்.

ஏனெனில் நபியவர்களின் பொன்மொழி. "யார் தனது குழந்தைகளுக்கு இதோ வந்து எடுங்கள் என்று கூறி விட்டு பின்னர் அதைக்கொடுக்காமல் விட்டால் அது பொய் பேசியதாகிவிடும்" (அஹ்மது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. தவறான வழியில் பெறப்பட்ட பொருட்களைக் கொண்டு உங்கள் பிள்ளைகளுக்கு உணவூட்டி விடாதீர்கள். அப்பணத்தின் மூலம் எந்தத் தேவைகளையும் நிறைவு செய்வதற்கும் முற்படாதீர்கள். உதாரணமாக சூது, இலஞ்சம், வட்டி, களவு, ஏமாற்றம், மோசடி போன்ற வழிகளில் பெறப்பட்ட பணத்தைக் கொண்டு உணவூட்டப்பட்டு வளர்க்கப்பட்ட குழந்தைகள் கெட்டவர்களாகவும், பாவம் செய்யக்கூடியவர்களாக்வும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாகவும், நெறிபிறழ்வுள்ளவர்களாகவும் சமூகத்தில் இழிவுக்குள்ளானவர்களாகவும் ஆகிவிடுகின்றனர். அவர்கள் எவ்வாறான வசதி வாய்ப்புக்களையும், பட்டம் பதவிகளையும் அடைந்து கொண்ட போதிலும் அவர்கள் வளர்க்கப்பட்ட பொருள் அதன் இழி தன்மையைக் காட்டிவிடும்.

07. எச்சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளை சபித்து அவர்களுக்குக் கேடாக துஆக் கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பெற்றோர் தம் பிள்ளைகளுக்காக நல்லதோ, கெட்டதோ எதனைக் கேட்டாலும் அல்லாஹ் அதனை ஏற்றுக்கொள்கின்றான். பிள்ளைகள் ஏதேனும் தவறிழைத்து விட்டால் அல்லது நமக்கு மாறுசெய்து விட்டால் அதற்காக அவர்களைத் திட்டுவதும், ஏசுவதும் அவர்களின் அழிவிற்கு காரணமாகிவிடும். இவ்வாறான வேளைகளில் அல்லாஹ் விரும்பத்தக்க முறையில் ``அல்லாஹ் உன்னை நல்வழிப்படுத்துவானாக'' என்று துஆச் செய்யுங்கள்.

08. அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைப்பதை விட்டும் உங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். எச்சந்தர்ப்பத்திலாயினும் இறைவனின் ஏகத்துவத்துக்கு (தௌஹீத்) மாசுகற்பிக்கும் வகையில் நடந்து கொள்வதோ, நடக்க முற்படுவதோ கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டியதாகும். இது பற்றி குர்ஆனில் சூறா யூனுஸில் அல்லாஹ் தெளிவு படுத்துகின்றான்.

``அல்லாஹ்வைத் தவிர்த்து, தங்களுக்கு எவ்வித தீமையும் செய்(யமுடி)யாதவற்றை இன்னும் தங்களுக்கு எந்த நன்மையும் செய்(யமுடி)யாதவற்றை அவர்கள் வணங்குகின்றனர். இவை அல்லாஹ்விடத்தில் எங்களுக்காக மன்றாடுபவை என்றும் அவர்கள் கூறுகின்றனர்'' (10 - 18)

இன்று எம்மையறியாமலே எத்தனையோ விதமான நடத்தைகள் எமது ஏகத்துவ அகீதாவைக் கெடுத்துவிடக் கூடியதாக எம்மிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியானதை நாம் உணராதவர்களாக இருக்கின்றோம். இது மிக ஆபத்தான விடயமாகும்.

இது போன்றே பணம், பட்டம், பதவி, அரசியல் இவைகளைக் கொண்டும் அல்லாஹ்வின் உதவி இன்றி எதையும் சாதிக்க முடியாது என்னும் உறுதியான ஈமானைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துங்கள்.

**ஆடை அணிதல்.**

இஸ்லாம் மனித வாழ்வின் எல்லாவிடயங்களுக்கும் ஒழுங்கு விதிகளைக் கற்றுத் தருகின்றது. அந்த அடிப்படையில் ஆடை அணிந்து கொள்ளுவதும் ஒரு வணக்கமாகும். இதன் ஒழுங்கு விதிகள் குர்ஆனிலும், நபியவர்கள் பொன்மொழிகளிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சிறு பராயத்திலிருந்தே உடலை மறைப்பதற்கு பிள்ளைகளைப் பழக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் பெரியவர்களாகி விட்டாலும் அதனைக் கடைப்பிடிக்க பழகிக் கொள்வார்கள். மறைக்க வேண்டிய முக்கிய பகுதிகளை மறைக்காத எந்த ஆடைகளையும், பிள்ளைகளுக்கு அணிவிக்கக் கூடாது. வெளிப்படையாக இதன்தாக்கம் தென்படாத போதும் இதனுடைய விளைவுகள் மிகப் பாரதூரமானவை. ஆடை அணிகலங்களை இஸ்லாமிய கட்டுக் கோப்புக்குள் அணிந்து கொள்ளாத சமூகம் பாரதூரமான பாவங்களுக்குள் மூழ்கி விடும். இது போன்றே ஆண்களுக்கான சேட், ரீசேட், நீளக் காற்சட்டை என்பன போன்ற ஆடைகளை பெண்களுக்கு அணிவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இது வாலிபர்களின் உணர்வுகளைத் தூண்டி குழப்பங்களுக்கு வழியேற்படுத்திவிடும். இது போன்றே எமது பெண் பிள்ளைகள் ஏழு(7) வயதை அடைந்தவுடன் தலையில் சீலை போட்டு தலையை மறைப்பதற்குப் பழக்குங்கள். இதனைக் கண்காணிக்காது கைவிட்டதனாலேதான் இன்று வளர்ந்து பெரியவர்களாகிவிட்ட பெண்களும் நாகரீகம் என எண்ணிக் கொண்டு அங்கங்களின் பெரும்பகுதியை வெளிக்காட்டும் உடைகளை அணியும் நிலை ஏற்பட்டுள்ளது. பருவ வயதை அடைந்த பெண்கள் பூரணமாக உடலை மூடுவதற்குப் பழக்க வேண்டும். அல்-குர்ஆன் இது பற்றி அழைப்பு விடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் உடைகள் எந்த வகையில் அமைய வேண்டும் என்பது பற்றி தெளிவுபடுத்தும் போது,

''நபியே உம்முடைய மனைவிகளுக்கும், உம்முடைய பெண்மக்களுக்கும், விசுவாசிகளுக்கும் அவர்கள் தங்கள் தலைமுந்தானைகளில் (தங்கள் முகங்களிலிருந்து கொஞ்சம் இறக்கிக் கொள்ளும்படி கூறுவீராக. அதனால் அவர்கள் கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு எவருடைய துன்பத்திற்கும் அவர்கள் உள்ளாகாதிருப்பதற்கு இது மிக சுலபமான வழியாகும். அல்லாஹ் மிக்க மன்னிப்போனும், கிருபை செய்பவனுமாக இருக்கிறான்'' (அல்-அஹ்சாப் 33-59)

பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டு வெளியில் சுற்றித் திரிவதை அல்லாஹ் வன்மையாகக் கண்டிக்கின்றான்.

''முன்னிருந்த அறியாத ஜனங்கள் (தங்களை அலங்கரித்துக் கொண்டு வெளியில் சென்று) திரிந்து கொண்டிருப்பதைப் போல் நீங்களும் திரியாதீர்கள்'' (அல்-அஹ்சாப் -33)

பிள்ளைகள் தத்தமக்குரிய ஆடைகளை அணிவதற்கு உபதேசம் செய்யுங்கள். ஆண்கள் ஆண்களுக்கான ஆடைகளையும், பெண்கள் பெண்களுக்கான ஆடைகளையும் அணிவதற்கு வழிகாட்டுங்கள். பெண்கள் ஆண்களைப் போன்று உடையணிவதையும், இறுக்கமான அங்கங்களை வெளிப்படுத்தும் உடைகளை அணிந்து கொள்வதையும், ஏனைய மதத்தவர்களின் தேசிய உடைகளைப் போன்ற வற்றையும் அணிந்து கொள்வதையும் நபியவர்கள் தடுத்துள்ளார்கள். இது பற்றி பொன்மொழிகள் பின்வருமாறு வருகின்றன.

''ஆண்கள் பெண்களைப் போன்றும் பெண்கள் ஆண்களைப் போன்றும் வேடம் போடுவதனை நபியவர்கள் சபித்துள்ளார்கள்.''

''ஆண்கள் பெண்களைப் போன்று நடந்து கொள்வதையும், இன்னும் பெண்கள் முடி சேர்த்துக் கட்டுவதையும் நபியவர்கள் சபித்துள்ளார்கள்.''

(புகாரி)

''யார் எந்தக் கூட்டத்திற்கு ஒப்பாகின்றாரோ அவரும் அந்தக் கூட்டத்தினைச் சார்ந்தவராவார்.''

(அபூதாவூத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் தொப்புளில் இருந்து முழங்கால்வரை பூரணமாக மறைப்பது கட்டாயக் கடனாகும். இப்பகுதியை மறைக்காமல் காட்டுவதும், பார்ப்பதும் ஹறாமாகும். விளையாட்டுநிகழ்வுகளின் போதும், சிலர் குளிக்கின்ற போதும் மற்றும் சிலர் வேலைகளில் ஈடுபடுகின்ற போதும் ஆடை விடயத்தில் அலட்சியப்போக்குள்ளவர்களாக காணப்படுகின்றனர். இது மனிதனின் வெட்கமற்ற தன்மையினை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

இதற்குமாற்றமாக சில ஆண்கள் பூமியை அரைத்துச் செல்லக்கூடிய வகையில் பெருமையோடு அணிந்து கொள்ளுகின்றனர். இவர்களைப்பற்றியும் நபியவர்கள்;

"பெருமைக்காக யார் ஆடைகளை பூமியில் இழுபடக் கூடியதாக அணிகின்றாரோ அவரை இறுதிநாளில் அல்லாஹ் பார்க்க மாட்டான்" என எச்சரித்தார்கள்.

எனவே, இப்பொன்மொழி அன்னிய மதத்தவர்களைப் போன்று தங்கள் ஆடை அணிகலன்களையும், பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்பவர்கள் இஸ்லாத்திலிருந்து வழி தவறியவர்கள் என்பதனை தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. எனவே, இவ்விடயங்களில் பூரணமான கவனம் செலுத்துங்கள்.

## நற்குணங்களும், நற்பழக்கவழக்கங்களும்.

01. பிள்ளைகள் எந்தப் பொருளை வாங்கும் போதும், வலதுகையைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பழக்குங்கள். எழுதுவதற்கும் வலது கையைப் பயன்படுத்துவதற்கு கற்றுக் கொடுங்கள். எந்த வேலை செய்ய ஆரம்பிக்கும் போது "பிஸ்மில்லாஹ்" என்று கூறி ஆரம்பிக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுங்கள். குறிப்பாக உண்ணுவதற்கும், பருகுவதற்கும் முன் பிஸ்மில் கூறி அமர்ந்து சாப்பிடவும், சாப்பிட்டு முடிந்த பின் அல்-ஹம்துலில்லாஹ் என்று சொல்லவும் வழி காட்டுங்கள்.

02. பிள்ளைகளைச் சுத்தமாக வாழப் பழக்குங்கள். "சுத்தம் ஈமானின் பாதி" என கூறப்பட்டுள்ளதனால் நகங்களை வெட்டி துப்பரவாக வைத்துக் கொள்ளவும், தலைமுடியை ஒழுங்காக எண்ணெய் பூசி ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ளவும், சாப்பிட்ட பின்னும் கைககளைக் கழுவிக் கொள்ள ஏவுங்கள். மல, சலம் சுத்தம் செய்யும் முறையையும், ஒழுங்கு விதிகளையும் தெளிவாகக் கற்றுக் கொடுங்கள். சிறு நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்து சுத்தம் செய்யாவிட்டால் ஆடைகள் அசுத்தமாகி உடலும், உடையும் அசுத்தமடைந்து தொழுகையைப் பாழாக்கி விடும், எனவே ஆடைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வழியேற்படுத்துங்கள்.

03. பிள்ளைகள் ஏதேனும் தவறு செய்தால் மென்மையாகவும், அன்பாகவும், பண்பாகவும், தனிமையிலும் உபதேசியுங்கள். கவனயீனமாகத் தொடர்ந்து நடந்தால் மூன்று நாட்களை விட அதிகரிக்காத வகையில் பேசுவதை விட்டுவிடுங்கள்.

04. பாங்கு (அதான்) சொல்லும் போது வாய்மூடி பாங்கிற்கு பதில் கூறுவதற்கும், பின்னர் துஆ ஓதி நபியவர்கள் மீது ஸலாவாத்துச் சொல்லவும் ஏவுங்கள்.

05. முடியுமானவரை படுக்கை விரிப்புக்களைத் தனித்தனியாக ஆண்களுக்கு வேறாகவும், பெண்களுக்கு வேறாகவும் ஏற்படுத்திக் கொடுப்பது அவர்களின் நற்குண நல்லொழுக்கத்திற்குப் பயனுள்ளதாகும். படுக்கையில் சுன்னத்தான ஒழுங்கு முறைகளையும் கற்றுக் கொடுக்கத் தவறாதீர்கள். ஓத வேண்டிய ஓதல்கள், துஆக்கள், திக்ருகள் என்பனவற்றை பிள்ளைகளுக்கு உரிய வேளைகளில் நினைவுபடுத்தி வைத்தால் இலகுவாக பாடமிட்டுக் கொள்வதோடு நடைமுறை வாழ்வில் கொண்டு வருவதும் அவர்களுக்கு சுலபமாகி விடும்.

06. மனிதர்களுக்கு இடையூறு பண்ணக் கூடியவைகளையும், அழுக்குகள், குப்பை கூளங்களையும் பாதையில் போடாமல் இருக்கவும், ஏதேனும் இவ்வாறான இடையூறான பொருட்கள் பாதையில் கிடந்தால் அதனை அகற்றவும் பழக்குங்கள்.

07. பிள்ளைகள் கெட்ட நண்பர்களுடன் கூடிப்பழகுவதையும், பாதைகளில் நின்று பொழுது போக்குவதையும் தவிர்க்குமாறு புத்தி புகட்டுங்கள்.

08. பிள்ளைகளை எங்கு சந்தித்தாலும் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று ஸலாம் கூறுங்கள். இது போன்றே மற்றவர்களுக்கும் ஸலாம் கூற ஏவுங்கள்.

09. பக்கத்து வீட்டாருடன் குறிப்பாக அவர்கள் பிள்ளைகளுடனும் நல்லன்போடும், இரக்கத்தோடும் நடக்கும்படியும், இன்னும் எந்த சந்தர்ப்பத்திலும் சண்டை சச்சரவுகள் தொந்தரவுகள் கொடுக்காமல் இருக்கவும் உபதேசியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. யாரும் வீட்டிற்கு விருந்தாளிகளாக வந்தால் அவர்களை வரவேற்று உபசரித்து கண்ணியமாக நடந்து கொள்ளவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் வழிகாட்டுங்கள்.

11. பெரியவர்களுக்கு மரியாதை செய்யவும், சிறுவர்களுக்கு அன்பு காட்டவும், உயிரினங்களிடம் அன்பு காட்டவும் கற்றுக் கொடுங்கள். அண்ணல் பெருமானின் அறிவுரை இங்கு குறிப்பிடத்தக்கது.

"சிறுவர்கள் மீது அன்பு காட்டாதவர்களும் பெரியவர்கள் மீது மரியாதை செலுத்தாதவர்களும் என்னைச் சார்ந்தவர்கள் அல்லர்." (மிஸ்காத்)

## வீரமும் தியாகமும்.

01. பிள்ளைகள் குடும்பத்தில் ஒரு அங்கத்தினர் என்பதை உணர்த்துவது அவசியமாகும். தேவையான பயனுள்ள நூல்களை வாசிக்கச் செய்வதும் கடமையாகும். உதாரணமாக நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை, அபூபக்கர் (றழி), உமர் (றழி), உதுமான் (றழி), அலி (றழி) போன்ற சஹாபாக்களின் நற்குணம், வீரம், தியாகம், பொறுமை, நல்லொழுக்கம் பேணுதல், பணிவு, போன்றவற்றை இளம்பிராயத்திலேயே அறிந்து கொள்வதற்கு வழிகாட்டுங்கள். எமது நேர்வழிக்கு அந்த உத்தமர்களே காரணமாக அமைந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை குர்ஆன், ஹதீஸ் என்பனவற்றைப் பின்பற்றியதாக இருந்தது என்பதனைத் தெளிவுபடுத்துவது ஆசிரியரதும், பெற்றோரினதும். தலையாய கடனாகும்.

02. பிள்ளைகள் வீரமுள்ளவர்களாக வாழ வழிகாட்டுங்கள். நல்லதை ஏவுவதிலே தீமையைத் தடுப்பதிலே அல்லாஹ் அல்லாத எதற்கும், எவருக்கும் அஞ்சாத திறமையுள்ளவர்களாக வளர்த்தெடுங்கள்.

03. பிள்ளைகளுக்கு பயனளிக்கக்கூடிய நல்ல புத்தகங்களை வாங்கிக் கொடுத்து நல்வழியின் பக்கம் தூண்டிவிடுங்கள்.

அல்-குர்ஆன், நபிவாழ்வு, சஹாபாக்கள், வீரம், தியாகம், இஸ்லாத்தின் இனிய கோட்பாடுகள் போன்ற நல்ல விடயங்களைக் கற்றுத் தேறி நல்வழியில் செல்வதற்கு வழியேற்படுத்திக் கொடுப்பது ஆசிரியர்களினதும், பெற்றார்களினதும் நீங்காத கடமையும் பொறுப்புமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோருக்கு நன்றி பாராட்டுதல்.

*அன்புக் குழந்தைகளே!*

நீங்கள் ஈருலகிலும் ஈடேற்றம்பெற வேண்டுமானால் பின்வரும் விடயங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுகுங்கள்.

01. பெற்றோருடன் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள். ''சீ'' என்ற வார்த்தையைக் கூட கூறி விடாதீர்கள். அவர்களுடன் வெறுப்புடன் நடந்து கொள்ளாதீர்கள். சங்கையான, கண்ணியமான வார்த்தை களையே கூறுங்கள். இது பற்றி அருள் மறை அல்-குர்ஆன்,

''நபியே! உமது இறைவன் தன்னைத் தவிர (மற்றொருவரையும்) வணங்கக் கூடாதென்றும் (கட்டளையிட்டிருப்பதுடன்) தாய், தந்தைக்கு நன்றி செய்யும் படியாகவும் கட்டளையிட்டிருக்கின்றான். அவர்களில் ஒருவரோ அல்லது இருவரோ முதுமை அடைந்து விட்ட போதிலும் உம்முடனிருந்து அவர்களை வெருட்டவும் வேண்டாம். அவர்களை நிந்தனையாக ''சீ'' என்று சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் எதைக் கூறிய போதிலும் (புஜம் தாழ்த்தி) மிக்க மரியாதையாகவும், அன்பாகவும் பேசவும்'' (17 - 23)

02. பெற்றோருடன் அன்பாகப் பழகுங்கள். அவர்களுடன் முகம் கடுகடுக்காதீர்கள். கோபத்தோடு பார்வையைக் கடுமையாக்காதீர்கள் அது அவர்களின் உள்ளங்களைப் புண்ணாக்கிவிடும். அவர்கள் உள்ளம் புண்பட்டு விட்டால் அதன் காரணமாக உங்கள் வாழ்வு மண்ணாகி விடும்.

03. பெற்றோரின் கௌரவத்தையும், பெருமையையும் பேணிக் கொள்ளுங்கள். அவர்களுடைய உத்தரவின்றி எதனையும் எடுத்துக்கொள்ளாதீர்கள்.

04. தாய், தந்தை இருவரையும் மகிழ்ச்சியுறச் செய்யுங்கள். அவர்கள் உங்களை ஏதும் வேலைகளைச் செய்யும் படி ஏவினால் அல்லது அவசியமான ஏதேனுமொன்றை வாங்கும் படி கூறினால் நீங்கள் அவைகளை நிறைவு செய்வதில் முந்திக் கொள்ளுங்கள். முக்கியமாக கல்வியைத் தேடிக் கற்றுக்கொள்ளுங்கள். தீனுடைய நற்கருமங்களில் ஆசையோடு முன்னேறுங்கள். இது உங்கள் பெற்றோரை மகிழ்விக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பெற்றோர் பாவமற்ற காரியங்களை ஏவும் போது அவர்களுக்கு முற்றாக அடிபணியுங்கள். மாறாக பாவமான காரியங்களை ஏவினால் அதனை அன்பாக விளக்கிக் கூறி ஒதுங்கிக் கொள்ளுங்கள். படைத்தவனுக்கு மாறு செய்து படைக்கப்பட்டோருக்கு வழிபட வேண்டியதில்லை, என்பதனை உணர்ந்து செயற்படுங்கள்.

06. உங்களுடைய சிறிய, பெரிய எல்லாவிடயங்களிலும் உங்கள் பெற்றோரை கலந்தாலோசித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவர்களின் ஆலோசனையும், பிரார்த்தனையும் மிகச் சிறந்த பயனை ஈட்டித்தரும்.

07. பெற்றோர் உங்களை அழைத்தால் புன்முறுவல் பூத்த முகத்தோடு பதில் கூறுங்கள். கண்ணியமற்ற வார்த்தைகளால், அசிங்க வார்த்தைகளால் பதில் கொடுக்காதீர்கள்.

08. பெற்றோரின் உறவினர்களோடும், நண்பர்களோடும் அன்பாகவும், பண்பாகவும் நடந்து கொள்ளுங்கள். அவர்கள் உயிரோடு இருக்கும் போதும், மரணித்த பின்பும் இந்த ஒழுங்குகளைப் பேணிக் கொள்ளுங்கள்.

09. பெற்றோருக்கு ஏதாவது விடயங்களில் பதிலளிக்கும் போது விவாதங்களினால் அல்லது குத்து வார்த்தைகளினால் பதில் கொடுக்காமல் ஒழுக்கமுள்ள மரியாதையான வார்த்தைகளைப் பிரயோகியுங்கள்.

10. பெற்றோருக்கு முன்பாக உங்களது சத்தங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். அவர்கள் பேசும் போது வாய் மூடிக் காது தாழ்த்திக் கேளுங்கள். அவர்களின் சகோதரர்களுடனும், உறவினர்களுடனும் சங்கையோடு நடந்து கொள்ளுங்கள்.

11. பெற்றோர் உங்களிடம் வந்தால் கௌரவமாக வரவேற்று அவர்களின் தலையை முத்தமிட்டுக் கொள்ளுங்கள்.

12. வீட்டு வேலைகளில் தாய்க்கு உதவுங்கள். தந்தைக்கு உதவி செய்வதில் பின் நிற்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பெற்றோரின் அனுமதியின்றி எந்த ஒரு அவசியத்தேவைக்கும் பிரயாணம் மேற்கொள்ளாதீர்கள். அவசியம் ஏற்பட்டால் பெற்றோரின் அனுமதியோடு புறப்படுங்கள். அவர்களுடன் கடிதம் மூலம் அல்லது தொலை பேசிமூலம் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்.

14. பெற்றோரின் அனுமதியின்றி அவர்களின் அறைகளுக்குள் நுழையாதீர்கள். முக்கியமாக அவர்கள் தூங்குகின்ற, ஓய்வெடுக்கின்ற வேளைகளில் இதனைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

15. நீங்கள் சில வேளைகளில் புகைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கலாம். எனினும் பெற்றோருக்கு முன்னிலையில் புகைப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

16. உணவு உண்ணும் போதும் ஏதாவது பருகும் போதும் அவர்களைக் கண்ணியப்படுத்துவதற்காக அவர்களுக்கு முன்பு உணவளித்து உபசரியுங்கள்.

17. பெற்றோரை விட உங்கள் மனைவி, குழந்தைகளைச் சங்கைப் படுத்தாதீர்கள். எல்லா வற்றிற்கும் முன்னதாகப் பெற்றோரின் பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் பெற்றோரின் பொருத்தத்திலேதான் அல்லாஹ்வின் பொருத்தம் இருக்கிறது. பெற்றோரின் வெறுப்பில் அல்லாஹ்வுடைய வெறுப்பு இருக்கிறது.

18. பெற்றோரிடம் பொய் பேசாதீர்கள். நீங்கள் பெற்றோர் விரும்பாத விடயங்களைச் செய்வதன் மூலம் அவர்களை நோவினை செய்து விடாதீர்கள்.

19. பெற்றோரை விட உயர்ந்த இடத்தில் நீங்கள் அமரக் கூடாது. அவர்களுக்கு முன்னிலையில் பெருமையோடு கால்களை நீட்டவும் வேண்டாம்.

20. எவ்வளவுதான் பெரும் பட்டம் பதவிகளில் இருந்தாலும் தந்தைக்கு முன் பெருமையடிக்காதீர்கள். அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களை ஒரு வார்த்தையைக் கொண்டேனும் உதாசீனம் செய்வதைப் பயந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பெற்றோருக்கு செலவு செய்யும் விடயத்தில் அவர்கள் முறையிடும் அளவிற்கு கஞ்சத்தனம் செய்யாதீர்கள். ஏனெனில் இது மிகவும் இழிவானது. இவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால், உங்கள் பிள்ளைகளிடத்தில் நீங்கள் அதனைக் காண்பீர்கள்.

22. பெற்றோரை சந்திப்பதனை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களுக்கு அதிகம் அன்பளிப்பு செய்யுங்கள். உங்களை நற்பண்புள்ளவர்களாக வளர்த்து ஆளாக்கியதற்காக அதிகம் நன்றி பாராட்டுங்கள். உங்கள் விடயத்தில் உங்கள் பெற்றோர் எடுத்துக் கொண்ட சிரமங்களை விட, நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்கு கூடிய கவனம் செலுத்துங்கள்.

23. மனிதர்களில் உங்கள் சங்கைக்கு முதலில் உரித்தானவர்கள் உங்கள் தாய்தான். ஏனெனில் மாதாவின் பாதங்களின் கீழ் மைந்தனின் சுவனம் இருக்கிறது.

24. உங்கள் பெற்றோரைக் கோபம் கொள்வதையும், நோவிப்பதையும் அடியோடு தவிர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் பெற்றோரை நோவினை செய்வதால் அது உங்கள் இரு உலக வாழ்வையும் பாழ்படுத்தி விடும். நீங்கள் எவ்வாறு உங்கள் பெற்றோருடன் நடந்து கொள்ளுகின்றீர்களோ அதே போன்றுதான் உங்கள் பிள்ளைகளும் உங்களோடு நடந்து கொள்வார்கள்.

25. ஏதேனும் ஒன்றை பெற்றோரிடம் பெறவேண்டியிருப்பின் அன்பாக மிருதுவான வார்த்தையால் கேளுங்கள், தந்தால் நன்றி செலுத்துங்கள். தராது விட்டால் மன்னித்து விடுங்கள். அவர்கள் தராதபோது மீண்டும் மீண்டும் கேட்டுக் கஷ்டப்படுத்தாதீர்கள்.

26. நீங்கள் காலையில் ஹலாலான உணவைத்தேடிக் கொண்டால் உங்கள் பெற்றோருக்கும் அதிலிருந்து உதவுங்கள். அது உங்கள் வாழ்வை வளமாக்கும். வறுமையைப் போக்கும்.

27. உங்கள் பெற்றோர் மீது உங்களுக்குரிய கடமை இருக்கிறது. அது போன்று மனைவி மீதும் உங்களுக்கு கடமைகள் உண்டு. எனவே, ஒவ்வொருவருக்குமுரிய உரிமைகளைக் கொடுத்து விடுங்கள். அவர்கள் பிணங்கிக் கொண்டால் இணக்கப்படுத்தி வையுங்கள். அவர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் போது இரகசியமாகக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. நீங்கள் திருமணம் செய்வதில் அல்லது தலாக் சொல்வதில் பெற்றோருடனே பிணங்கிக் கொண்டால், மார்க்கம் எதைக் கூறுகின்றதோ அதனடிப்படையில் தீர்ப்புக்கு வாருங்கள். இது உங்களுக்கு சிறந்ததாகவும், உதவியாகவும் இருக்கும்.

29. பெற்றோரின் துஆக்கள் நல்லதோ, கெட்டதோ எதுவாக இருப்பினும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே பெற்றோர்கள் உங்களுக்கு கேடாகக் கேட்கும் கெட்ட பிராரத்தனைகளை விட்டும் பாதுகாப்பாக இருங்கள்.

30. மற்ற மனிதர்களோடும் ஒழுக்கமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ளுங்கள். ஒழுக்கயீனமாக நடந்து கொள்வதனால் பெற்றோருக்கு ஏச்சுப் பேச்சுக்கள் கிடைக்க நேரிடும் ஏனெனில் ஒரு மனிதன் பெற்றோரை ஏசுவது பெரும் பாவத்தைச் சார்ந்தது என்பது நபி மொழியாகும்.

31. பெற்றோர் உயிரோடு இருக்கும் போதும் மரணித்த பின்பும் அடிக்கடி சந்தியுங்கள். அவர்களுக்கு தானதர்மம் செய்யுங்கள். அதிகம் அதிகம் துஆச் செய்து கொள்ளுங்கள்.

"யாஅல்லாஹ்! என்னை என் பெற்றோர்கள் இளமைப் பருவத்தில் பேணிப்பாதுகாத்து வளர்த்தது போல் நீயும் அவர்கள் மீது பிழை பொறுத்து அருள் சொரிவாயாக"

மௌனத்தின் மாண்பு

ஹசரத் லுக்மான் (அலை) அவர்களிடத்தில் ஒரு மனிதன் வந்து

நீ இன்னாருடைய அடிமையில்லையா? எனக்கேட்டான் அதற்கு அவர்கள் ஆம் அவ்வாறுதான் இருக்கிறேன் என்றார்கள். அதற்கவன் இன்ன மலையடிவாரத்தில் ஆடு மேய்ப்பவன் இல்லையா? என்றார்கள் மறுபடியும் அவன் அவ்வாறிருந்தும் இந்த உயர்ந்த அந்தஸ்து எவ்வாறு கிடைத்தது எனக்கேட்டான். அதற்கு அவர்கள் நாலு விடயங்களால் பெற்றுக்கொண்டேன். என்றார்கள்.

1) அல்லாவின் அச்சம். 2) வாக்கில் சத்தியம் (உண்மை)
3) அமானிதத்தைப் பூ ரணமாக நிறைவேற்றல். 4) பயனில்லாத பேச்சை விட்டும் மௌனம் சாதித்தல்.

(ஆதாரம் : நூர்றுல் மன்துார்)

பரிதாபத்திற்குரிய பனை மரம்.

ஓர் விசுவாசிக்கு உதாரணம் நன்கு விளைந்த பயிருள்ள வயலைப் போன்றது. அடிக்கடி காற்றடித்து அப்பயிரை இங்கும் அங்குமாக அசைத்துக் கொண்டிருக்கின்றது. இது போலவே ஒரு விசுவாசிக்கு அடிக்கடி தொல்லைகள் துன்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. நயவஞ்சகன், இணைவைப்பவன், நிராகரிப்பவன் போன்றோருக்கு உதாரணம் ஒரு பனை மரம் போன்றது. காற்று வீசுவதனால் அது அசைவதில்லை. ஆனால் வேரோடு கீழே சாய்ந்து விடுகின்றது

(புகாரி, முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

"உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும்பாவமான காரியங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால் உங்களுடைய (மற்றைய சிறிய) பாவங்களுக்கு (அதனை) நாம் பரிகாரமாக்கி உங்களை (மன்னித்து மிக்க) கண்ணியத்தின் வாயிலிலும் புகுத்துவோம்" (சூறா நிஸா : 4-31)

## அண்ணல் நபியின் அருள் மொழி.

"பாவங்களில் பெரியது இறைவனுக்கு இணைவைத்தல், மனிதனைக் கொலை செய்தல், பெற்றோரைத் துன்புறுத்துதல், பொய்ச்சத்தியம் செய்தல்" (புகாரி - முஸ்லிம்)

பெரும் பாவங்கள் எனக் குறிப்பிடும் போது அவற்றுக்கு உலகில் தண்டனை விதிக்கப்பட்ட பாவங்களாக இருக்கும். அல்லது மறு உலகில் அதற்கான தண்டனை வாக்களிக்கப்பட்டதாகும்.

இதன் எண்ணிக்கை ஏழில் இருந்து எழுநூறுவரை பிரித்துள்ளதாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். பெரும் பாவங்களின் வகைகள்

01. "அகீதா" என்னும் இஸ்லாமியக் கொள்கைகளில் ஏற்படும் பாவங்கள்.
02. உயிர். புத்தி என்பனவற்றில் விளையும் பெரும் பாவங்கள்.
03. பொருளின் வழியாக உண்டாகும் பெரும் பாவங்கள்.
04. வணக்கங்களின் மூலமாக உண்டாகும் பாவங்கள்.
05. குடும்ப வாழ்வில் உண்டாகும் பாவங்கள்.

### 01. "அகீதா" என்னும் இஸ்லாமியக் கொள்கைகளில் ஏற்படும் பாவங்கள்.

அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, அல்லாஹ் அல்லாதவைகளிடம் துஆக் கேட்பது. ஏனெனில், துஆ(பிரார்த்தனை) என்பது வணக்கமாகும். (திர்மிதி) மார்க்க அறிவை உலக இலாபத்திற்காக மட்டும் கற்றுக் கொள்ளுதல். கற்றுக் கொண்ட அறிவை மறைப்பதும், மோசடி செய்வதும். குறிகாரர்களையும், சூனியக் காரர்களையும் உண்மைப் படுத்துவதும், அல்லாஹ் அல்லாதவற்றிற்கு நேர்ச்சை வைப்பதும், பலியிடுவதும் நட்சத்திசாஸ்திரத்தை நம்புவதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூனியத்தைப் படிப்பதும், பிறருக்குக் கற்றுக் கொடுப்பதும், அல்லாஹ் அல்லாதவைகளைக் கொண்டு சத்தியம் செய்தல், தகுந்த ஆதாரமின்றி ஒரு முஸ்லிமைக் காபிராக கருதுதல், அல்லாஹ்வுடைய வார்த்தை களை (குர்ஆன்) பொய்யாக்குதல், நபி (ஸல்) அவர்களின் வார்த்தை களில் பிழை காணுதல், அல்லாஹ்வுடைய தண்டனையை அச்ச மற்றிருத்தல். மையித்துக்காக ஒப்பாரி வைப்பதும், தன்மீது அடித்து விழுதல், தக்தீர் என்னும் அல்லாஹ்வின் முன் அளப்பை பொய்ப்பித்து விடுதல், என்பன பெரும் பாவங்களைச் சார்ந்ததேயாகும்.

**02. உயிர், புத்தி என்பனவற்றில் விளையும் பெரும்பாவங்கள்.**

சட்டரீதியான உரிமையின்றி (மனிதனை) உயிர்க் கொலை புரிதல், மனிதனை எரித்தல், உயிர்ப்பிராணிகளை நெருப்பால் எரித்தல், பலவீனமானவர்களை அல்லது மனைவியை அல்லது மாணவர்களை அல்லது வேலையாட்களை அல்லது மிருகங்களைக் காயம் ஏற்படக் கூடிய அளவுக்குப் பாரதூரமாகத் தண்டித்தல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், போதைவஸ்துக்களான கள், சாரயம், பிஸ்கி, பிறண்டி, அபின், ஹஸீஸ், ஹரோய்ன், மார்ஜுவானா, ஓபியம் என்பனவும் இது போன்ற போதையூட்டும் மாத்திரைகள் பாவிப்பதும், ஊசி மூலமாக உடம்பில் ஏற்றிக் கொள்வதும், நஞ்சு வகைகளைப் பாவிப்பதும், பெரும்பாவங்களைச் சார்ந்ததே.பன்றி இறைச்சி, செத்த பிராணி போன்றவற்றை உண்பதும் கூடாது. (உயிருக்கு ஆபத்தான சூழல் ஏற்படுகின்ற இக்கட்டான சூழலைத் தவிர) மனித உயிருக்கும், உடலுக்கும் ஊறுவிளைவிக்கும் கஞ்சா, பீடி, சுருட்டு, சிகரட், புகையிலை, வெற்றிலை, சுண்ணாம்பு போன்றவைகளைப் பாவிப்பதும் கூடாது, மார்க்கத்திற்கு முரணான தவறான விடயங்களை அது பற்றிய அறிவின்றித் தர்க்கித்தல், மனிதர்களுக்கு அநியாயம் இழைத்தல், பகைமையைத் தூண்டுதல், உண்மையை நிராகரித்தல்.

ஏசுவது, திட்டுவது, முக்கியமாக சஹாபாக்களை ஏசுவதும் பாரதூரமான குற்றங்களாகும். ஒற்றுக் கேட்டல், நீதிபதியிடத்தில் பொய் சாட்சி கூறுதல், உயிர்ப்பிராணிகளை அவசியத் தேவை நோக்கமின்றி வரைவதும் பாரதூரமான குற்றங்களாகும்.

**03. பொருளின் வழியாக உண்டாகும் பெரும் பாவங்கள்.**

அநாதைகளின் பொருட்களை அபகரிப்பது, சூது, களவு, வழிப்பறி, கொள்ளை போன்றவற்றில் ஈடுபடல், இலஞ்சம் வாங்குதல், கொடுத்தல். அளவை, நிறுவைகளில் குறைவு செய்தல், பொய்ச் சத்தியம் செய்து பொருளை விற்றல், உணவுப்பொருட்களில் கறுப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை, பதுக்கல் மூலம் பொருள் திரட்டல், உடன் படிக்கையை மீறுதல், மோசடி செய்தல், சாட்சியை பயமுறுத்துதல், அல்லாஹ் தந்த (பொருளினை) அளவினைப் பொருந்தாது விடல் என்பன பெரும் குற்றங்களாகும். ஆண்கள் தங்க ஆபரணங்கள் அணிவதும், பட்டு ஆடை அணிவதும், பெருமைக்காக உடைகளை ஆண்கள் கரண்டிக் கால்களுக்கு கீழ் இழுபடும் படியாக அணிந்து கொள்வதும் தவிர்க்க வேண்டிய விடயங்களாகும்.

**04. வணக்கங்களின்மூலமாக உண்டாகும் பெரும் பாவங்கள்.**

பர்ழான தொழுகைகளை விட்டு விடல், காரணமின்றிப் பிற்படுத்தல், ஸகாத்தைக் கொடுக்காது விட்டு விடல், றமழான் மாதத்தில் (பிரயாணம், கடுமையான நோய்) போன்ற தகுந்த காரணமின்றி நோன்பை விடல், போய் வருவதற்கான சக்தியும், வசதியும் பெற்றிருந்தும் ஹஜ்ஜுக்கு செல்லாதிருத்தல், அல்லாஹ்வுடைய பாதையில் ஜிஹாது செய்வதனை விட்டும் விரண்டோடுதல், ஜிஹாது செய்ய கடமையானவர்கள் தனது நாவால் அல்லது பொருளால் அல்லது உடலால் ஜிஹாது செய்யாது விடல், தகுந்த காரணமின்றி ஜமாஅத்துத் தொழுகையினை விட்டுவிடல், சக்தி உள்ளவர்கள் நன்மையை ஏவி தீமையைத் தடுக்காது விடல், சிறு நீர் கழித்து சுத்தம் செய்யாது விடல், கற்ற அறிவைக் கொண்டு அமல் செய்யாது விடல் போன்ற அனைத்தும் பெரும் பாவங்களைச் சார்ந்ததே.

**05. குடும்பவாழ்வில் உண்டாகும் பெரும் பாவங்கள்.**

விபச்சாரம், தன்னினச் சேர்க்கையில் ஈடுபடல், கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறுதல், பெண்கள் தங்களுடைய அங்கங்களை வெளிக்காட்டல், பெண்கள் ஆண்களைப் போன்று, ஆண்கள் பெண்களைப் போன்று வேடம் போடுதல், உடை அணிதல் (ஆண்கள் தாடியை சிரைத்து விடல்) பெற்றோரை நோவினை செய்தல், துன்புறுத்துதல், மார்க்கம் அனுமதித்த காரணமின்றி குடும்பத்தை வெறுத்துச் செல்லல், ஹைளு, நிபாஸ் போன்ற காரணங்களின்றி மனைவி கணவனுக்கு படுக்கை விரிப்பிலே மாறுபுரிதல், பெண்கள் மஹ்றம்கள் (திருமணம் செய்ய ஹறாமான உறவினர்கள்) இன்றி பயணம் செய்தல், விபச்சாரத்திற்கு ஏதாவது உதவி புரிதல், பக்கத்து வீட்டாருக்கு துன்பம் விளைவித்தல் போன்ற அனைத்தும் பெரும் பாவங்களைச் சார்ந்ததாகும்.

அருள் மறை அல்-குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடும் போது ''நிச்சயமாக அல்லாஹ் தௌபாச் செய்யக் கூடியவர்களையும், சுத்தமானவர்களையும் விரும்புகிறான்'' (அல்-குர்ஆன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புச் சகோதரனே!

எதாவது பெரும் பாவங்கள் நிகழ்ந்து விட்டால் உடனே அவற்றை விட்டுவிடு. அதற்காக கவலைப்பட்டு வருந்தி, இனிமேல் இவ்வாறான தவறுகளில் ஈடுபடமாட்டேன் என உறுதி கொள். அத்துடன் அல்லாஹ்விடம் கெஞ்சி அழுது துஆச் செய்து கொண்டிரு! உள்ளம் உருகி கண்ணீர் சிந்திக் கையேந்தி வா! தௌபாச் செய்யக் கூடியவர்களை அல்லாஹ் விரும்புகின்றான், தௌபாவை ஏற்றுக் கொள்கின்றான். உன்னுடைய உணவும், உடையும் ஹலாலானதாக இருக்கட்டும். நிச்சயம் உனக்கு தௌபாவின் வாசல் திறந்திருக்கிறது.

முத்தான உபதேசங்கள் பத்து.

ஹசறத் முஆத் இப்னு ஜபல் (ரழி) கூறகின்றார்கள். எனக்கு எனது நேசர் நபி (ஸல்) அவர்கள் பத்து உபதேசங்களைப் புரிந்தார்கள்.

01. நீர் கொல்லப்பட்டாலும், தீயில் எரிக்கப்பட்டாலும் அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காதீர்கள்.
02. பெற்றோருக்கு மாறு செய்து விடாதீர். எது வரையெனில் உனது மனைவியை விடும் படியும், முழுச் செல்வத்தையும் செலவழிக்கும் படியும் அவர்கள் கூறினால் கூட அதனையும் மீறக் கூடாது.
03. வேண்டுமென்றே பர்ளுத்தொழுகையை விட்டு விடாதீர்கள். அவ்வாறு செய்பவரை விட்டும் அல்லாஹ்வின் பொறுப்பு நீங்கிவிடுகிறது.
04. மது அருந்தாதீர். அது எல்லாத் தீமைகளுக்கும் வேராகும்.
05. அல்லாஹ்வுக்கு மாறு செய்யாதீர். அதனால் அல்லாஹ்வின் கோபம் உண்டாகிவிடுகிறது.
06. உமது படையினர் அனைவரும் இறந்தாலும் கூட போர்க்களத்தை விட்டு ஓடிவிடாதீர்.
07. ஓரிடத்தில் கொலரா நோய் பரவி மக்கள் மரணமடைந்தாலும் கூட அவ்விடத்தை விட்டு அகலாதீர்.
08. உமது குடும்பத்தினருக்கு முடிந்தவரை தாராளமாகச் செலவு செய்வீராக.
09. குடும்பத்தினரை கண்டிக்க உபயோகிக்கும் பிரம்பை அகற்றிவிடாதீர்.
10. அல்லாஹ்வைப் பற்றி அவர்களுக்கு அச்சமூட்டிக் கொண்டே இருப்பீராக.

(ஆதாரம் - அஹ்மது)

வறுமை நீங்கி வளம் பெருக.

''சூறா'' வாக்கியாவை ஒவ்வோர் இரவிலும் ஓதி வருபவருக்கு ஒரு போதும் வறுமை ஏற்படாது என நபியவர்கள் கூறினார்கள். இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் ஒவ்வோர் இரவிலும் அதனை ஓதி வருமாறு தங்களுடைய பெண்மக்களிடம் கூறி வந்தார்கள்.

(பைஹகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லாஹ்வின் பாதையில் செய்யப்படும் ஜிஹாத்.

ஜிஹாத் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும். இது பொருளாலும், உயிரினாலும், நாவாலும், பேனை முனையாலும் நடைபெறலாம். பொருளை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதன் மூலமாகவும், உயிரைப் போருக்காக தீனுக்காகப் போராடி வெட்டப்பட்டு சஹீதாகி விடுவதன் மூலமாகவும், பேனை முனையால், நாவினால் அல்லாஹ்வின் பக்கம் "த'வத்" மக்களை அழைப்பதனாலும் ஏற்படுகின்றது

ஜிஹாதில் பல வகை உண்டு.

01. பர்ளுஐன் - ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடன்.
02. பர்ளுகிபாயா - கூட்டுக் கடமை (சமூகத்தின் சிலரேனும் செய்வதனால் கடமை நிறைவேறி விடும்)
03. முஸ்லிம்களின் சட்டத்தை நிலை நிறுத்துவதற்கான ஜிஹாத்.
04. யஹூதிகள், நஸாறாக்கள், நெருப்பு வணங்கிகள், நாஸ்திகர்கள், காபிர்கள் ஆகியோர்களுக்கெதிரான ஜிஹாத்.
05. பாவிகளுக்கும், துர்ச்செயல் புரிபவர்களுக்கும் எதிரான ஜிஹாத்.
06. செய்த்தானுக்கெதிரான ஜிஹாத்.
07. நப்ஸுக்கு எதிரான ஜிஹாத்.

### 01. பர்ளுஐனைச் சார்ந்த ஜிஹாத் :

இது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயமாக கடமையாக்கப் பட்டுள்ளது. முஸ்லிம் நாடுகளை, சிந்தனை ரீதியாகவும், படைப்பலத்தின் மூலமாகவும், ஆக்கிரமித்தவர்களை நாட்டை விட்டும் அப்புறப்படுத்தி, முஸ்லிம் நாடுகளை விடுவித்தெடுப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் தலையாய கடமையாகும். இதற்கு முஸ்லிம்கள் சக்தி பெற்றிருந்தும் புறக்கணிப்பாக நடந்து கொண்டால், அது மாபெரும் தண்டனைக்குரிய குற்றமாகும். உதாரணமாக பலஸ்தீனர்களின் பிரதேசத்தை ஆக்கிரமித்து அவர்களை அக்கிரமமாக வெளியேற்றி வெறியாட்சி நடத்தும் இஸ்ரவேலர்களை உயிர், பொருள் என்பனவற்றைத் தியாகம் செய்து வெளியேற்றி பாலஸ்தீனர்களின் தாயகத்தை மீட்டெடுப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் தலையாய கடனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்றே பொஸ்னியா, செஸ்னியா, பர்மா, கம்போடியா, கஷ்மீர், இந்தியா போன்ற நாடுகளிலும் முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தி, சொத்து சுகங்களையும், மானத்தையும் சூறையாடி அக்கிரமங்கள் புரிகின்ற ஆட்சியாளர்கள் பற்றி அனைவரும் அறிவோம். இதற்கு மற்றோர் உதாரணம் லிபியா, ஈராக் போன்ற நாடுகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானங்களும், நடவடிக்கைகளுமாகும். முஸ்லிம் நாடுகள் என்ற ஒரே காரணத்திற்காக அமெரிக்காவும் அதன் அடிவருடிகளான ஏகாதிபத்திய வாதிகளும் சேர்ந்து இரு நாடுகளையும் பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியிலும் பலவீனப்படுத்தியுள்ள இந்த நிகழ்வு மிகவும் பாரபட்சமானதாகும். இதற்கு ஐக்கிய நாடுகள் சபையைத் தனது கை பொம்மையாக பாவித்துக் கொண்டிருப்பது அதிர்ச்சியூட்டும் அத்து மீறலாகும். இவ்வாறான வேளைகளில் முஸ்லிம் நாடுகள் இணைந்து செயற்பட்டு தன் சக்தியை ஓரணியில் திரட்டி இஸ்லாத்திற்கெதிரான விஷமிகளின் அத்துமீறல்களை அடக்கி தீனை மேலோங்கச் செய்வதும் மிக முக்கிய கடனாகும்.

**02. பர்ளுகிபாயாவைச் சார்ந்த ஜிஹாத்:**

இது ஓர் கூட்டுக் கடமையாகும். சிலர் இப்பணியைச் செய்கின்ற போது ஏனையோர் இக்குற்றத்திலிருந்து நீங்கி விடுகின்றனர். இஸ்லாமியப் பிரச்சாரப் பணியை ஏனைய நாடுகளுக்கு எத்திவைப்ப தாகும். இஸ்லாமிய சட்டம் உலகில் நிலை நாட்டப்படுகின்ற வரை இஸ்லாத்தின் கலிமாவை மேலோங்கச் செய்வதற்கு செய்யப்படும் இவ்வாறான ஜிஹாத் நபியவர்களினதும், சஹாபாக்களினதும் காலகட்டத்தில் மிகவும் உச்ச நிலையில் இடம் பெற்றதாகும். இது அல்லாஹ்விடத்தில் மிகவும் விருப்புக்குரி உழைப்பாகும்.

இவ்வாறான தஃவத்துடைய உழைப்பை முஸ்லிம்கள் விட்டு விட்டு உலக ஆசாபாசங்களிலும், வியாபாரத்திலும், விவசாயத்திலும் மூழ்கிய போது முஸ்லிம்களை அழிவும், இழிவும் சூழ்ந்து கொண்டது. இதற்கு பின்வரும் நபிமொழி சிறந்த சான்றாக அமைகின்றது.

''நீங்கள் வட்டியோடு தொடர்புபட்ட (ஈனா) எனப்படும் ஒரு வகையான வியாபாரத்தில் மூழ்கியிருப்பீர்கள். மாட்டின் வாலைப் பிடித்துக் கொண்டு திரிவீர்கள். விவசாயத்தை பொருந்திக் கொண்டிருப்பீர்கள். அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்வதனை விட்டுவிடுவீர்கள். (அப்போது) அல்லாஹ் உங்கள் மீது இழிவைச் சாட்டுவான். நீங்கள் (பூரணமாக) தீனுக்குள் நுழைகின்ற வரை இந்நிலை உங்களை விட்டும் நீங்காது.'' (அஹ்மது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய முஸ்லிம்களின் நிலையை அப்படியே இப்பொன்மொழி படம் பிடித்துக்காட்டுகிறது. இன்றைய சூழலில் முஸ்லிம்கள் தலைநிமிர்ந்து கௌரவத்தோடும் நின்மதியோடும் வாழ வேண்டுமானால் இஸ்லாமிய வாழ்க்கைக்குள் பூரணமாக நுளைந்து கொள்வதோடு, த஁வாப்பணியிலும் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலமே நிலைமையை சீராக்கிக் கொள்ள முடியும்.

**03. முஸ்லிம்களின் சட்டத்தை நிலைநிறுத்துவதற்கான ஜிஹாத்:**

ஆட்சியாளர்களுக்கும் அதன் உதவியாளர்களுக்கும் தீனின் மகத்துவத்தினை உபதேசத்தின் மூலம் எத்திவைப்பதாகும். ஏனெனில் நபியவர்கள் குறிப்பிடும் போது ''ஜிஹாதில் சிறந்தது அநியாயக்கார அரசனிடத்தில் உண்மையை எடுத்துரைப்பதாகும். என மொழிந்தார்கள்.

(ஆதாரம் அபூதாவூத் - திர்மிதி)

முஸ்லிம்கள் தீனுக்கு மாற்றமான சட்டங்களிலும் கொள்கை களிலும் மூழ்கியிருந்தால் அவர்களை அதிலிருந்து விடுவித்து அல்லாஹ்விடத்தில் தௌபாச் செய்து மீளச் செய்வதும் தங்களது கோட்பாடுகளைச் சீராக்கிக்கொள்வதும் தூய இஸ்லாத்தின் பக்கம் அவர்களின் உள்ளங்களை வளர்த்தெடுப்பதும் அவசியமாகும். இது பற்றி தெளிவுதரும் அல்-குர்ஆன் ''மனிதர்கள் (தங்கள் தீய நடத்தையை விட்டு) தங்களை மாற்றிக் கொள்ளாத வரையில் நிச்சயமாக அல்லாஹ்வும் (அவர்களுக்குப் புரிந்த) அருளைமாற்றி விடுவதில்லை" (13 - 11)

இது பற்றி ஒரு மார்க்க அறிஞர் குறிப்பிடும் போது,

''உங்களது உள்ளங்களில் இஸ்லாமிய ஆட்சியை நிலை நாட்டுங்கள். உங்கள் பிரதேசங்களில் நீங்கள் ஆட்சியாளர்களா கலாம். இது பற்றி அல்-குர்ஆன் தெளிவான சான்று தருகின்றது"

''(மனிதர்களே!) உங்களில் எவரேனும் மெய்யாகவே விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்தால் அவர்களுக்கு முன்னர் சென்றவர்களை(ப் பூமிக்கு) அதிபதிகளாக்கிய பிரகாரமே இவர்களையும் நிச்சயமாக பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் விரும்பிய மார்க்கத்தில் ஸ்திரப்படுத்தி வைப்பதாகவும் இவர்களுடைய பயத்தை அமைதியும், பாதுகாப்புமாக மாற்றி விடுவதாகவும் நிச்சயமாக அல்லாஹ் வாக்களித்துள்ளான்"

(24 - 55)

இன்றைய நிலையில் எமது நாட்டையும், பிரதேசங்களையும் பொறுத்தவரையில் எமக்கு சுதந்திரமாக இயங்கும் ஆட்சியமைப்பும் அச்சமற்று வாழும் சூழ் நிலையும் மிகவும் அவசிமாகிவிட்டது. அச்சத்திற்கும் கஷ்ட நஸ்டங்களுக்கு மத்தியிலும் வாழும் வாழ்க்கையின் பிரச்சினைகளை உணர்ந்துள்ளோம். ஒரு நெருக்கடி நிலமை தோன்றி பூமி சுருங்கி, உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு உயிருக்கும், உடமை களுக்கும் பேராபத்து ஏற்படும்போது இது நன்றாக உணரப்படுகின்றது.

இவைகள் அனைத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கான வழியை (ஈமான்) என்னும் மெய் விசுவாசத்திலும் (அமலே சாலிஹாத்) எனும் நற்செயற்பாடுகளிலும் அல்லாஹ் தொடர்புபடுத்தி வைத்துள்ளான். ஈமானோடு கூடிய நற்செயல்கள் எந்த அளவு அதிகரிக்கின்றதோ அதற்கான முயற்சிகள் எந்த அளவு நடைபெறுகின்றதோ அந்த அளவு நாட்டிலும், வீட்டிலும், அமைதி, சாமாதானம், சுபீட்சம், நிம்மதி, அச்சமற்று வாழும் தன்மை என்பன உருவாகும்.

### 04. யஹூதிகள், நஸாறாக்கள், சியோனிசவாதிகள், காபிர்களுக்கெதிரான ஜிஹாத்:

இப்போராட்டம் எழுத்தாலும், பேச்சினாலும், உயிர்த்தியாகத்தின் மூலமாகவும் மேற்கொள்ளப்படும். இது பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது,

"நீங்கள் இணைவைப்பவர்களோடு உங்கள் நாவினாலும், பொருளைக் கொண்டும் போராடுங்கள்" என்றார்கள். (அஹ்மது)

### 05. பாவிகளுக்கு, துர்ச்செயல்கள் புரிபவர்களுக்கு மெதிரான ஜிஹாத்:

இதுவும் கையினாலும், நாவினாலும், உள்ளத்தினாலும் மேற்கொள்ளப் படும். இது பற்றி நபியவர்கள், "உங்களில் யார் தவறைக் காண்பீர்களோ அதனைக் கையினால் தடுத்து நிறுத்தவும். இல்லாத பட்சத்தில் நாவைக் கொண்டு தடுத்து நிறுத்தவும். அதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாவிடின் உள்ளத்தினால் இது தவறு என வெறுத்து ஒதுக்கவும். இது ஈமானின் மிகப்பலவீனமான நிலையாகும்" (முஸ்லிம்)

பாவச் செயல்களையும் மார்க்கத்திற்கு விரோதமான விடயங்களையும் பார்க்கும் போது உள்ளத்தில் அது பற்றிய வெறுப்பு ஏற்படாவிடின் அந்த மனிதன் ஈமானின் மிகக் குறைந்த அளவேனும் இல்லாதவனாகவே கருதப்படுவான்.

### 06. செய்த்தானுக்கெதிரான ஜிஹாத்:

இது செய்த்தானுக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் எதிராக மேற் கொள்ளப்படும் ஜிஹாதினைக் குறிக்கின்றது. இது அவனுடைய சகல ஏவல்களிலிருந்தும் தன்னை விடுவித்து படைத்த எஜமானாகிய அல்லாஹ்வுக்கு மட்டும் சகல காரியங்களிலும் வழிபடுவதற்குத் தன்னை தயார்படுத்துவதாகும். இது பற்றி பூசரி இமாம் புர்தாவில் குறிப்பிடும் போது "நீ செய்த்தானுக்கும், நப்சுக்கும் மாறு செய்து கொள். அந்த இரண்டும் உனக்கு தெளிவான நல்லுப தேசங்களைச் செய்தாலும் அதனை சந்தேகித்துக் கொள்"

மேற்கூறப்பட்ட அனைத்து வகையான ஜிஹாது பற்றிய தெளிவுகளையும் அல்-குர்ஆனிலும், சுன்னாவிலும் பெறமுடியும். எனவே, ஜிஹாத் எனும் போது வாளைக் கைகளில் ஏந்தி அல்லது துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களைக் கொலை செய்வதுதான் என்னும் தவறான விளக்கத்தை தாங்களும் விளங்கி பிறரையும் வழி கெடுத்துக் கொண்டிருப்பது பாரதூரமான குற்றமாகும். ஜிஹாதுடைய நோக்கத்தைப்புரிந்து அது எந்த வகையினைச் சார்ந்தது என்பதனைத் தெளிவு கண்டு அதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பின்பே அதற்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

"ஆதமுடைய மக்களே! நீங்கள் செய்த்தானை வணங்கக் கூடாது. அவன் உங்களுக்கு பகிரங்க விரோதி" என்று உங்களிடம் நான் உறுதி மொழி வாங்கவில்லை?

"என்னையே நீங்கள் வணங்க வேண்டும். இதுவே நேரான வழி."

உங்களில் அதிகமான மக்களை திட்டமாக அவன் வழி கெடுத்து விட்டான். எனவே நீங்கள் (இதனை) விளங்கிக் கொண்டவர்களாக இருக்க வேண்டாமா? (36:60, 61, 62)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாஅல்லாஹ்! எங்களையும் உளத்தூய்மையோடு நற்செயல் புரியும் முஜாஹிதீன்களின் கூட்டத்தில் சேர்த்து நேர்வழி காட்டுவாயாக''

**07. நப்ஸுக்கெதிரான ஜிஹாத் :**

நப்சுக்கு மாறு செய்து அல்லாஹ்வுக்கு வழிபடுவதன் பக்கம் அதனைப் பழக்குவதும், பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளப் பயிற்சி கொடுப்பதுமாகும். இது பற்றி அல்-குர்ஆனில் அல்லாஹ், யூசுப் (அலை) அவர்களை அஸீஸ் மன்னனுடைய மனைவி அழைத்த வரலாற்றை நினைவுபடுத்திக் கூறுகின்றான்.

''நிச்சயமாக மனம் தீமையை அதிகம் ஏவக்கூடியதாகவே இருக்கிறது. என்னுடைய றப்பு அருள் புரிந்தவரைத் தவிர. நிச்சயமாக என்னுடைய றப்பு மிக்க மன்னிக்கிறவன், மிக்க கிருபையுடையவன்.'' (12 - 53)

பூசரி இமாம் அவர்கள் தமது புர்தா சரீபில் நப்சைப் பற்றிக் குறிப்பிடும் போது ''நப்ஸ்'' ஒரு பால்குடிக்கும் குழந்தை போன்றது. இதனை உரியகாலத்தில் தாய்ப்பால் குடிப்பதனை மறக்கச் செய்யவில்லையானால் பெரியவனாகியும் குடித்துக் கொண்டேயிருப்பான். உரிய காலத்தில் பால் குடி மறக்க வைத்தால் மறந்துவிடுவான். இது போன்றே நப்ஸினது நிலையும், பாவத்தில் விட்டால் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கும்.

**ஐந்து விடயங்கள் கொண்டு வரும் ஐந்து ஆபத்துக்கள்.**

ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி ஓ முஹாஜிரீன்களே! ஐந்து விடயங்களில் நீங்கள் மூழ்கி விடாமல் அல்லாஹ் பாதுகாப்பானாக.

01. எந்த ஒரு சமூகத்தினரிடையே விபச்சாரம் பெருகி விடுமோ, அவர்கள் மத்தியில் தொற்று நோய்களும் இதுவரை கேள்விப்படாத புது நோய்களும் ஏற்பட்டு விடும். (இன்றைய எய்ட்ஸ் கூட ஒரு உதாரணமாகும்.)

02. எந்தக் கூட்டம் அளவை நிறுவைகளில் மோசடி செய்கின்றார்களோ, அவர்கள் கடுமையான உழைப்பிலும், பஞ்சத்திலும் அரசனின் கொடுமையிலும் அகப்படுவார்கள்.

03. எக் கூட்டத்தினர் ஸகாத் கொடுப்பதை விட்டுவிடுகின்றார்களோ அவர்கள்மீது மழை குறைந்து போய்விடும். பிராணிகள் இல்லை என்றால் கொஞ்சம் கூட மழை இறங்காது.

04. எக்கூட்டத்தினர் அல்லாஹ்வினதும், றசூலினதும் அறுதிமானங்களை முறிக்கின்றார்களோ அவர்கள்தங்கள் எதிரிகளிடம் வீழ்ச்சியடைவார்கள். (இன்று இதனை உலகளாவியரீதியில் கண்ணூடாகக் காண்கின்றோம்)

05. எக்கூட்டத்தினர் அநீதியாக உத்தரவிடுகின்றார்களோ அக் கூட்டம் உள்நாட்டுக் கலவரங்களில் அகப்பட்டுக் கொள்வார்கள். (ஆதாரம் - தர்கீப்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வின் உதவிக்கான வழி.

கலீபா உமர் இப்னு கத்தாப் (றழி) அவர்கள் தனது படைத்தளபதி ச'.திப்னு அபீவக்காஸ் (றழி) அவர்கள் தலைமையில் பாரசீக நாட்டை வெற்றி கொள்வதற்காக அனுப்பிய படையினருக்கு அவர்கள் அனுப்பி வைத்த உபதேசத்தின் சுருக்கம் பின்வருமாறு.

01. "தக்வா" என்னும் இறையச்சத்தைப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்.

"எல்லா நிலமைகளிலும் இறையச்சத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என உங்களுக்கும் உங்களோடு அஜ்னாதீனில் உள்ளவர்களுக்கும் நான் ஏவுகின்றேன்." ஏனெனில் நிச்சயமாக "தக்வா" பகைவர்களை வெற்றிகொள்வதற்கான மிகப்பெரிய யுத்த தந்திரமாகும்.

02. உங்கள் பகைவர்களை விட நீங்கள் உங்கள் பாவங்களை விட்டும் ஒதுங்கி வாழ்வதை நான் உங்களுக்கு வலியுறுத்துகின்றேன். பகைவர்களை விட உங்கள் படையினரின் பாவங்கள் நிச்சயமாக மிகவும் பயப்பட வேண்டிய விடயமாகும். எதிரிகள் அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் காரணத்தினாலேதான் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் உதவி செய்கின்றான். அப்படியில்லையெனில் முஸ்லிம்களிடத்தில் விசேட சக்தி எதுவுமில்லை. ஏனெனில் எங்களுடைய எண்ணிக்கை அவர்களுடைய எண்ணிக்கையை விடக் குறைவானதே. எங்களுடைய திட்டங்களும் அவர்களுடைய திட்டங்கள் போன்றதல்ல. எனவே, பாவங்கள் புரிவதில் அவர்களைப் போன்று நாங்களும் நடந்து கொண்டால் எங்களை விட அவர்கள் சிறப்புப் பெறுவார்கள். அல்லாஹ்வின் உதவி தடைப்படுமானால் எங்கள் பலத்தையும் திட்டங்களையும் வைத்து எதிரிகளை நாம் மிகைத்து விட முடியாது.

உங்களுக்கு நான் ஒரு முக்கிய விடயத்தினை வலியுறுத்திக் கூறுகின்றேன். நீங்கள் செய்யும் செயல்களை நன்கு அறிந்த அல்லாஹ்வுக்காக உங்கள் நடத்தையை சீராக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் பாதையில் இருக்கும் நிலையில் எச்சந்தர்ப்பத்திலும் பாவம் செய்து விடாதீர்கள். எங்களை விட எதிரிகள் மோசமானவர்கள் இதனால் நாம் பாவம் புரிந்தாலும் எதிரிகளை எங்கள் மீது சாட்டப்படமாட்டாது எனக் கூறாதீர்கள். ஏனென்றால் எத்தனையோ



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூட்டத்தினர்கள் மீது அவர்களை விட மோசமானவர்கள் அடர்ந்தேறி ஆக்கிரமித்துள்ளார்கள். இதற்கு உதாரணமாகப் பல சம்பவங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். நெருப்பு வணங்கிகளான மஜூசிகள், பனூ இஸ்ரவேலர்களை ஆக்கிரமித்த விடயத்தைக் குறிப்பிடலாம்.

இது போன்று தாத்தாரியர்கள் முஸ்லிம்களை ஆக்கிரமித்து முஸ்லிம்களின் பள்ளிகளைத் தீக்கிரையாக்கியும். நூல் நிலையங்களைப் பொசுக்கியும், பெண்களின் கற்புகளைச் சூறையாடி, பச்சிளம் குழந்தைகளைப் பதைக்கப் பதைக்கக் கொன்று குவித்தும், புனிதமிக்க அருள் மறை வேதம் அல்-குர்ஆனை நாய்களின் கழுத்தில் கட்டிவைத்தும் புரிந்த அக்கிரமம் சொல்லும் தரமானதல்ல. ஒருமாத கால எல்லைக்குள் 2 மில்லியன் (20 இலட்சம்) முஸ்லிம்களின் உயிரைப் பலியெடுத்த சோக வரலாறு முஸ்லிம்களுக்கு மாபெரும் படிப்பினைக்குரியதாகும். இது போன்றே இன்றைய நிலையில் அறபு முஸ்லிம்கள் மீது இஸ்ரவேலர்களான யூதர்களின் எல்லை மீறிய அடாவடித்தனத்தைக் குறிப்பிடலாம். மிக அண்மைக் கால பொஸ்னிய, செஸ்னிய அத்துமீறல்கள், அமெரிக்க அரக்கன் ஈராக்கிய மக்கள் மீது மேற்கொண்ட அத்துமீறல்கள் அனைத்தும் இதனைச் சார்ந்தவைகளே.

03. அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். உங்கள் பகைவர்களை விட்டும் அல்லாஹ்விடம் உதவி தேடுவது போன்று உங்கள் நப்சுடைய தீங்குகளை விட்டும் அவனிடம் உதவி தேடுங்கள். உங்களுக்கும் எனக்கும் அல்லாஹ்விடம் வெற்றியை வேண்டுகின்றேன்.

(பிதாயாவன் நிஹாயா - இப்னு கதீர்)

**உளவாளி ஒருவரின் உண்மைத் தகவல்.**

ஹஸ்றத் அபூபக்கர் (றழி) ஆட்சிக்காலத்தில் அஜ்னாதீன் என்ற இடத்திலே உரோமர்களோடு கடும் போர் செய்ய நேர்ந்தது. உரோமர்களது படைத்தலைவன் முஸ்லிம் அல்லாத ஒரு அறபியைப் பிடித்து, முஸ்லிம்களின் முகாமுக்குச் சென்று ஓர் இரவும் பகலும் தங்கியிருந்து அவர்களது (24) மணிநேர நடவடிக்கைகளையும் கண்ணோட்டம் செய்து உளவறிந்து வருமாறு அனுப்பி வைத்தான். உளவாளி அறபிப் பாஷை தெரிந்தவனாக இருந்ததால் முஸ்லிகளது முகாமுக்குள் அவன் மிகவும் சரளமாக பழகினான். முஸ்லிம்களது ஒவ்வொரு செயலையும் நோட்டமிட்டுத் திரும்பி வந்து உரோமத் தளபதியிடம் பின்வருமாறு கூறினான்.

"இந்த முஸ்லிம்கள் இரவு முழுவதும் உலகை வெறுத்த ஞானிகளைப் போல இறைவனைத் தியானிப்பதிலே கழிக்கின்றார்கள். பகல் முழுவதும் போர் வீரர்களாக குதிரைகள் மீது பறக்கின்றார்கள். அரச குமாரனாக இருந்து திருடிவிட்டால் நேர்மைக்கு முரணாக நடந்து கொண்டதற்காக அவனது கரங்களைத் துண்டிக்கவும் அவர்கள் தயங்குவதாகத் தெரியவில்லை. அவன் விபச்சாரம் செய்தால் கல்லெறிந்து கொல்லவும் அவர்கள் பின்னடைவதாகத் தெரியவில்லை.

இவ்வுயர் பண்புகளினாலேதான் சஹாபாக்களுக்கு சென்ற இடமெல்லாம் வெற்றிக் கொடி நாட்டினார்கள்.

(ஆதாரம் - கமீஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாடியைத் தொங்க விடல்.

01. "அவர்களை நான் திட்டமாக ஏவுவேன். அப்பொழுது அல்லாஹ்வின் படைப்புக்களுடைய கோலங்களைத் திட்டமாக அவர்கள் மாற்றி விடுவார்கள்." (4-119)

02. "றசூல் (ஸல்) அவர்கள் உங்களுக்கு எதைக் கொடுத்தார்களோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். எதனை விட்டும் உங்களை அவர் தடுத்தாரோ (அதனை விட்டும்) விலகிக் கொள்ளுங்கள்." (59-7)

தாடியை சிரைப்பது அல்லாஹ்வின் படைப்பின் கோலத்தை மாற்றி செய்த்தானுக்கு வழிபடுவதாகும்.

நபியவர்கள் தாடியை வளர்க்கும்படி (தொங்கவிடும்படி) கூறியுள்ளார் கள். வழித்து விடுவதைத் தடுத்துள்ளார்கள்.

03. மீசையைக் குறைத்து விடுங்கள், தாடியைத் தொங்க விடுங்கள், நெருப்பு வணங்குவோருக்கு மாற்றம் செய்யுங்கள். (முஸ்லிம்)

உதட்டின் மேற்பகுதியை மறைக்கக் கூடிய அளவிற்கு மீசை வந்துவிடின் அதைக் கத்தரிப்பது நபி வழியாகும். இது காபிர்களுக்கு மாற்றம் செய்யும்படி கூறிய நபிமொழியினைப் பின்பற்றுவதாகும்.

04. பத்து விடயங்கள் நபியின் வழிமுறையினைச் சார்ந்தவைகளாகும். மேல் மீசையைக் கத்தரிப்பது, தாடியை தொங்க விடல், பல்துலக்குவது, நாசிக்குத் தண்ணீர் செலுத்துவது, நகம் வெட்டுவது ........ (முஸ்லிம்)

05. "பெண்களைப் போன்று ஆண்கள் வேசம் போடுவதனை நபியவர்கள் சபித்துள்ளார்கள்." (புகாரி)

தாடியை சிரைத்து விடுவது ஆண்கள் தங்களை பெண்களுக்கு ஒப்பாக்கி விடுகின்ற ஒரு செயலைச் சார்ந்ததேயாகும்.

06. எனது அல்லாஹ் தாடியைத் தொங்க விடுவதையும் மீசையைக் குறைத்துக் கொள்வதையும் எனக்கு ஏவியுள்ளான். (இப்னு ஜரீர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடிவைப்பது அல்லாஹ்வின் கட்டளையும் அவனது தூதரின் வழிமுறையுமாகும். இதனைப் பேணி நடப்பது (வாஜிபான) கட்டாயக் கடனாகும் என்பது அனேகமாக இஸ்லாமிய பேரறிஞர்களின் முடிவாகும்.

07. தாடி மனிதனுடைய முகத்தை சூரியனுடைய தாக்கத்திலிருந்தும், ஏனைய பிறதாக்கங்களிலிருந்தும் பாதுகாக்கின்றது.

08. ஆண் பறவைகளை அல்லாஹ் தோகைகளையும், விசேட இறகுகள், பூக்கள் போன்றவற்றைக் கொண்டும் அழகுபடுத்தியுள்ளது போல மனிதர்களில் ஆண்களுக்கு அல்லாஹ் தாடியை அழகுக்காகவும், கம்பீரத்திற்காகவும் வழங்கியுள்ளான்.

09. தாடிவைப்பதனைச் சில வேளைகளில் உங்கள் நண்பர்கள், பெற்றோர்கள் ஏன் மனைவிமார்கள் கூட வெறுக்கக்கூடும். அவ்வேளைகளில் இது அல்லாஹ்வின் ஆணை, நபியவர்களின் வழிமுறை என்பதனை நினைவு படுத்துங்கள். நபியவர்களின் பொன்மொழியினையும் நினைவு கூறுங்கள். ''படைத்தவனுக்கு மாறுசெய்து படைப்பினத்திற்கு வழிபடவேண்டியதில்லை. (அஹ்மது)

அழிவைக்கொண்டு வரும் அளப்பெரிய தீமைகள்.

என்னைப் பின் தொடரும் மக்கள் பின் வரும் 15 காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விடுவார்களானால் அவர்கள் மீது துன்பங்களும் தொல்லைகளும் இறங்க ஆரம்பித்து விடும். அவை பின்வருமாறு,

01. (யுத்தங்களில் வசமாக்கப்படும்) கனீமத் பொருட்களை தங்கள் பூர்வீகச் சொத்துக்களாக நினைக்கத் தொடங்கிவிடல்.
02. அமானிதப் பொருட்களை கனீமத்பொருட்களாகப் பாவிக்க ஆரம்பித்துவிடல்.
03. ''ஸக்காத்'' (ஏழை வரி) கொடுப்பதை அபராதம் போல கருதிவிடல்.
04. மனைவியின் பேச்சை மதித்து நடப்பதுடன் தாயின் பேச்சை தட்டி விடுதல்.
05. உறவினர்களோடும், நண்பர்களோடும், நல்ல விதமாக நடந்து கொள்வார்கள் ஆனால் தந்தையோடு கடுமையாக நடந்து கொள்வார்கள்.
06. மஸ்ஜிதுகளில் கூச்சலும், குழப்பங்களும், அதிகமாக இருந்தல்.
07. எந்தவித தகுதியும் அற்றவர்கள் சமுதாயத்தில் பொறுப்பு தாரிகளாகக் கருதப்படுதல்.
08. ஒருவனது தீமையிலிருந்து தற்காத்துக்கொள்ள அவனை (போலியாகக்) கண்ணியப்படுத்துதல்.
09. மதுவைப் பகிரங்கமாக உபயோகப்படுத்துதல்.
10. ஆண்கள் பட்டாடை அணிதல்.
11. பாடல்கள், பாடகிகள், நியமனம் அதிகமாதல்.
12. இசைக்கருவிகள் சாதாரணமாக உபயோகப் படுத்தப்படல்.
13. உம்மத்திலுள்ள முந்தியவர்கள் (நபித்தோழர்களான சஹாபாக்கள், மார்க்கத்திற்காகப் போராடி உயிர் துறந்தவர்கள்) நிந்திக்கப்படுதல்.

இந்த நிலை சர்வசாதாரணமாக ஏற்பட்டு விடுமானால் செம்புயல் (மண்மாரி) வீசுவதையும், பூமி பிளந்து புதைந்து போவதையும், முள்ளம் பன்றி, குரங்குகள் போல மாறிவிடுவதையும் எதிர்பார்த்திருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை, பாடல் பற்றி இஸ்லாம்.

''மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள் அவர்கள் (பொய்யான கட்டுக் கதைகள் முதலிய) வீணான செய்திகளை விலைக்கு வாங்கி (அவற்றை ஜனங்களுக்கு ஓதிக்காண்பித்து) அல்லாஹ்வுடைய வழியிலிருந்து, அறிவின்றி (ஜனங்களை) வழிகெடுத்து அதனைப் பரிகாசமாகவும் எடுத்துக் கொள்கின்றனர். இத்தகையோருக்கு இழிவு தரும் வேதனை நிச்சயமாக உண்டு.
(லுக்மான்-6)

இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் உட்பட அதிகமான முபஸ்ஸிரீன்கள் ''லஹ்வுல் ஹதீஸ்'' என்பதற்கு பாடல்கள் என்ற கருத்தையே தெரிவிக்கின்றார்கள்.

ஹசன் பசரீ (ரஹ்) அவர்கள் ''இவ்வசனம் பாடல்கள் (இசைக்கருவி) என்பன வற்றைக் குறிப்பிடுகிறது என்பதாகக் கூறுகின்றார்கள். அல்லாஹ் திருமறையில் குறிப்பிடும் போது ''நீ உனக்குச் சாத்தியமான அளவு கூச்சலிட்டு அவர்களைத் தூண்டு''

நபியவர்கள் ஒருமுறை எச்சரித்தார்கள், ''என்னுடைய உம்மத்தில் திட்டமாக ஒரு கூட்டம் இருப்பார்கள். அவர்கள் விபச்சாரம், பட்டுத்துணிகள், இசைக்கருவி என்பனவற்றை தங்களுக்கு ஹலாலாக்கிக் கொள்வார்கள்
(ஆதாரம் - புஹாரி)

மேற் கூறப்பட்ட ஹதீஸை நன்கு ஆராய்ந்தால், முஸ்லிம்களில் ஒரு கூட்டம் வருவார்கள் அவர்கள் விபச்சாரம், பட்டுத்துணி, போதைவஸ்த்துக் கள் பாவிப்பது, இசைக்கருவி போன்றன விலக்கப்பட்டிருந்தும் அவை அனுமதிக்கப்பட்டதாக எண்ணிக்கொள்வார்கள். இசைக்கருவி எனக்குறிப்பிடும் போது இனிமையான சப்தத்தை வெளிப்படுத்தக் கூடிய அனைத்தும் அதனுள் அடங்கி விடுகின்றது. உதாரமாக மேளம், சலங்கை, வயலின் என்பனவற்றைக் குறிப்பிடலாம். யஹூதி நஸாராக்களால் புகுத்தப்பட்டுள்ள ''பேண்ட்'' வாத்தியக் கருவிகளும் இதனுள் அடங்குகின்றது. ''மணி செய்த்தானின் குரலாகும்'' என்பது நபிமொழி.
(ஆதாரம் - முஸ்லிம்)

மணி, சலங்கை போன்றவற்றின் சத்தங்கள் வெறுக்கப் பட்டுள்ளன. இமாம் சாபிஹ் (றஹ்) குறிப்பிடுகையில், பாடல்கள் வெறுக்கத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணானவைகளாகும். அது நிராகரிக்கப் பட்டவைகளுக்கு ஒப்பானது. யார் அதில் மூழ்கிவிடுகின்றானோ அவன் மடையனாவான். அவனுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளப் படலாகாது.

## இசை, பாடல்கள் என்பனவற்றின் கேடுகள்.

இஸ்லாம் எந்த ஒரு விடயத்தையும் அதிலுள்ள கெடுதியின் காரணமாகவே தடை செய்து விடுகின்றது.

01. சங்கீதக் கருவிகள் மனிதனுடைய நப்சுக்கு போதையூட்டுகிறது. இது உடலுக்கு போதையூட்டும் போதை வஸ்துக்களை விட மிகவும் ஆபத்தானது. குரல் இனிமையில் ஒருவர் ஈர்க்கப்பட்டு போதை ஏறுகின்ற போது அவரிடம் (சிர்க்) இணைவைப்பதும் உண்டாகி விடலாம். கெட்ட அநியாயமான, மோசமான கருமங்களில் கூட அகப்பட்டு விடலாம். இணை வைப்பது, விபச்சாரம் புரிவது, கொலை செய்வது போன்ற பெரும் பாவங்களில் மூழ்கிவிடும் சந்தர்ப்பம் சங்கீத இசைக்கருவிகள் மீட்டப்படும் இடங்களிலும், பாட்டுக் கச்சேரிகளிலும் தாராளமாக நடைபெறுகின்றன. இவ்வாறான இடங்களில் கூடுபவர்கள் கைதட்டுவதும், விசில் அடிப்பதும் சாதாரண நிகழ்வுகளாகும்.

02. ''சிர்க்'' என்னும் இணைவைக்கும் சந்தர்ப்பம் அதிகமாக உண்டாகின்றது. பாடல்கள் பாடுபவர்களையும், இசைக்கருவி மீட்டுபவர்களையும் அல்லாஹ்வை அன்பு கொள்வது போல அன்பு கொள்கின்றார்கள். தமது அபிமான பாடகர்களையும், இசையமைப் பாளர்களையும் உயிரிலும் மேலாக மதிக்கின்றார்கள். இச்செயல் சிர்க்கை உண்டாக்குமளவுக்கு சென்று விடலாம்.

03. மோசமான பாடல்கள் விபச்சாரத்தின் வாயில்களாகும். பாடல்கள் இடம் பெறும் இடங்களிலும் இசைக்கருவிகள் மீட்டப்படும் இடங்களிலும் பெண்கள் தங்கள் அங்கங்களை அசைத்து ஆடல்பாடல்களில் ஈடுபடும் இடங்களிலும் ஆண்கள், பெண்கள் பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி சுதந்திரமாகப் பழகுகின்றார்கள். இதனால் நப்ஸ் போதையூட்டப்பட்டு போதை வஸ்துக்கள் பாவித்தவர்களை விடமோசமான நிலைக்கு ஆளாகி விடுகின்றார்கள்.

04. மோசமான பாடல்களையும், சங்கீதங்களையும், இசையையும் கேட்பதனால் உள்ளத்திற்கு எப்பயனும் கிட்டுவதில்லை. மாறாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நயவஞ்சகத் தன்மையும், கெட்ட சிந்தனைகளுமே உருவாகின்றது. இங்கு பாடல்கள் எனக்குறிப்பிடும் போது குறிப்பாக இசையோடு பாடப்படுகின்ற பாடல்கள், ஆபாசக்கருத்துக்களைத் தருகின்ற கீழ்தரமான உணர்வுகளைத் தூண்டக்கூடிய பாடல்களே விஷேடமாகக் கொள்ளப்படுகின்றன.

05. இசை சம்பந்தமான தெளிவினைப் பெற்றுக்கொள்ள நபியவர்கள் காலத்தில் நடந்த ஒரு வரலாற்று சம்பவத்தினை முன்னுதாரணமாகக் கொள்ளலாம். பர்றா இப்னுமாலீக் (றழி) அவர்கள் இனிய குரல்வளம் உள்ளவர்களாக இருந்தார்கள். நபியவர்கள் சில பிரயாணங்களில் கலந்து கொள்ளும்போது சில பைத்துகளை பாடுவார்கள். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் சில பெண்கள் அப்பக்கமாக வந்தார்கள். இதைக் கண்ட இறைத்தூதர் அவர்கள் பெண்களை பயந்து கொள்ளுங்கள் என்று எச்சரித்து பாட்டுப்பாடுவதை நிறுத்திவிடுமென உபதேசித்தார்கள். ஹாகிம் அவர்கள் குறிப்பிடும்போது பெண்கள் அந்த ஆணின் சத்தத்தைக் கேட்பதையும் நபியவர்கள் வெறுத்தார்கள்.

எமது நாட்டில் இன்று வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றில் இறைவனை தூசிக்கின்ற, இணைவைப்பதனை நேசிக்கின்ற பாடல்களும் தாராளமாகப் பாடப்படுவதனை அவதானிக்கலாம். உதாரணமாக 'இறைவன் பொய் சொல்லுவான்' 'இறைவா நீ கூடக் குடிகாறன்' 'கடவுள் ஏன் கல்லானான்' 'இறைவன் கொடியவனே' இந்த வார்த்தைகளை பாடல் எனக்கூறிக் கொண்டு நாமும் பாடுகின்றோம். இதே போன்று இச்சையை கொச்சையாகக் கூறுபோட்டுக்காட்டும் ஆபாசப்பாடல்கள் இன்று ஏராளம், அவற்றுக்குத் தான் பெரிய மதிப்பு. எனவேதான் இஸ்லாம் இதனை ஒதுக்கியுள்ளது.

## பாடல்களும் அதன் நயவஞ்சகத் தன்மையும்.

பாடல்கள் இதயங்களில் நயவஞ்சகத்தன்மையினை முளைக்கச் செய்கின்றது. அல்லாஹ்வை திக்று செய்வது, தண்ணீர் பயிரினங்களை முளைக்கச் செய்வதுபோன்று உள்ளத்திலே ஈமானை முளைக்கச் செய்கின்றது. என்பதாக இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந்த மனிதன் (மோசமான) பாடல்கள் பாடுவதை வளக்க மாக்கிக்கொள்கின்றானோ அவன் உணர்ந்து கொள்ளாத நிலையில் அவனது உள்ளம் நயவஞ்சகத்தன்மையடைந்து விடுகின்றது. நயவஞ்சகத்தன்மையின் யதார்த்தத்தினைப் புரிந்து கொண்ட மனிதன் பாடல்களின் நச்சுத்தன்மையை அவனது உள்ளத்திலே ஏற்படும் மாற்றத்திலே கண்டு கொள்வான். ஒரு அடியானுடைய உள்ளத்தில் பாடல்கள் மீதுள்ள பற்றும் குர்ஆன் மீதுள்ள பற்றும் ஒன்று சேராது. ஏனெனில் அந்த இரண்டில் ஒன்று மற்றொன்றை விரட்டிவிடும். குர்ஆனின் வசனங்களை கேட்கும்போதும், ஓதும் போதும் ஆடுவது, அசைவது கூடாது. மாறாகப் பாடல்களைப்பாடும் இடங்களில் ஆடுவதும், அசைவதும் கூச்சலிடுவதும், இசைக்கருவிகள் பாவிப்பதும் இடம் பெறுகின்றது. இதில் மனிதன் இலகுவாக ஈர்க்கப்படுகிறான். இவனை இலகுவில் பிரிக்கமுடியாது, இவ்வாறு பாடலிலும் இசையிலும் மூழ்கியுள்ள மனிதன் தொழுகைக்கு உரிய நேரத்தில் பள்ளிக்கு செல்வதும், ஜமாஅத் தொழுகைக்கு சமூகமளிப்பதும் கஷ்டமாகி உள்ளது.

**இசையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக வழிமுறைகள்.**

01. வானொலி, தொலைக்காட்சி, படக்காட்சி போன்றவற்றின் ஆடல் பாடல்கள், இசைகளிலிருந்தும் ஒதுங்கிக்கொள்வதோடு இசைக் கச்சேரி நாடகக்கூத்துக்கள் போன்றவற்றையும் முற்றாகத் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

02. இசை பாடல்கள் போன்றவற்றில் மூழ்கி உள்ளவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள மிகச் சிறந்தவழி அதிகமாகக் குர்ஆன் ஓதுவதையும் திக்று செய்வதையும் வழக்கமாக்கிக்கொள்ளவேண்டும். குறிப்பாக சூறத்துல் பகரா ஓதப்படும் வீட்டிலிருந்து நிச்சயமாக செய்த்தான் விரண்டோடுகிறான், என்ற ஹதீசின் அடிப்படையில், ஓதி வரவேண்டும்.

03. நபிமார்கள் ஸஹாபிகள் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகளை நல்வழிநடந்த இமாம்கள் வொலிமார்கள், பெரியோர்கள் நற்பண்புகளை அடிக்கடி வாசித்து உளத்தெளிவு பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்களுக்கான அனுமதி.

பெருநாள் தினங்களில் இசையின்றி பாடல்கள் பாட அனுமதியுண்டு. ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (றழி) அவர்களின் வீட்டில் நுளைந்தார்கள். இரு பெண்கள் 'றபான்' அடித்துக்கொண்டிருந்தார்கள். (வேறொரு அறிவிப்பின்படி) பாட்டுப்பாடிக்கொண்டிருந்தார்கள். அபூபக்கர் (றழி) அவர்கள் இருவரையும் விரட்டினார்கள். அதற்கு நபியவர்கள் அவர்களை விட்டுவிடுங்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் பெருநாள் இருக்கின்றது இது எமது பெருநாள் தினம் எனக் கூறினார்கள்.

(ஆதாரம் புஹாரி)

எனவே நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் திருமணநாட்களில் பாட்டுப்பாடுவதையும் "றபான்" அடிப்பதையும் அனுமதித்துள்ளார்கள். வேறெந்த இசைக்கருவிக்கும் நபியவர்கள் அனுமதி கொடுத்ததற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. (றபான் என்பது ஒரு பக்கம் அடைக்கப்பட்டது.)

பாவம் புரிவோர் பணத்தோடும் பகட்டோடும் வாழ நல்ல மனிதர்கள் கஸ்டங்களும், நஸ்டங்களும் அடைவதேன்.

நிராகரிப்போரின் செல்வ பாக்கியத்தைத் கண்டு மனிதர்கள் யாவருமே ஒரே வகுப்பினராக ஆகிவிடுவார்கள் என்பதில்லாதிருந்தால் அல்லாஹ்வாகிய றஹ்மானை நிராகரிப்போரின் வீட்டு முகடுகளையும், அதன் மீது அவர்கள் ஏறிச்செல்லும் படிக்கட்டுக்களையும் கூட நாம் வெள்ளியாலாக்கி விடுவோம் அவர்களுடைய வீடுகளின் வாயில்களையும் அவர்கள் சாய்ந்து கொண்டிருக்கும் கட்டில்களையும் கூட வெள்ளியால் ஆக்கியிருப்போம். அல்லது பொன்னாலேயே அலங்கரித்தும் விடுவோம் ஏனென்றால் இவையாவுமே இவ்வுலக வாழ்க்கையிலுள்ள அற்ப இன்பங்களேயன்றி வேறில்லை. உமது இறைவனிடம் இருக்கும் மறுமையின் நிலையான வாழ்க்கையோ இறைவனுக்குப் பயந்து நடப்பவருக்குச் சொந்தமானது.

(அல்-குர்ஆன் 43 - 33,35)

விசுவாசிகள் மட்டும் பீதியடையாதிருந்தால்தான் நான் அக்காபிர்களின் உடலின் மேல் இரும்பாலான உறையை அணிவித்திருப்பேன். இதனால் அவர்களுக்கு எக்காலத்திலும் எவ்விதச் சிரமமும் ஏற்படாது. மேலும் அவர்களுக்கு உலகில் எல்லாச் சுகங்களையும் அள்ளிக் கொடுத்து விட்டிருப்பேன்.

( ஹதீஸ் குத்ஸ் - துர்றுல் மன்துர்)

கைக்கூலியின் கதி.

என்னைப் பின்பற்றுபவர்கள்,

01. ஆலிம்கள் மீது துரோதம் பாராட்டி,
02. கடை வீதிகளில் காணப்படும் கட்டிடங்களைக் காட்சிப் பொருளாக மாற்றி, பணத்தைச் சேகரிக்கும் நோக்குடன் திருமணம்செய்ய முற்பட்டால், அல்லாஹ் அவ்வாறான கூட்டத்தின் மீது நாலுவிதமான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகின்றான்.

01. காலத்தின் பஞ்சம்
02. கொடுங்கோல் அரசனின் ஆட்சி
03. அதிகாரிகளின் மோசடி
04. எதிரிகளின் தாக்குதல்

(ஆதாரம் - ஹாக்கிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவப் படங்கள், சிலைகள் விடயத்தில் இஸ்லாத்தின் தீர்ப்பு.

முதல் மனிதன் ஆதம் (அலை) தொடக்கம் இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை எத்தி வைக்கப்பட்ட இஸ்லாம் மனிதர்களை ஏகத்துவத்தின் (ஒரே இறைவனான அல்லாஹ்வின்) பக்கம் அழைப்பு விடுகின்றது. அல்லாஹ் அல்லாதவைகளை வணங்குவதைவிட்டும் தடுக்கின்றது. வலீமார்களை, சாலிஹீன்களை அல்லாஹ்வுடைய இடத்தில் வைத்து வணங்குவதும், உதவி தேடுவதும் தடுக்கப்பட்டுள்ளது. இது போன்றே சிலைகள், உருவப் படங்கள், சின்னங்கள் போன்றவற்றை வைத்து வழிபடுவதும் தடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி அல்லாஹ்,

``ஒவ்வொரு வகுப்பினருக்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பியிருக்கின்றோம். (அத்தூதர்கள் அவர்களை நோக்கி) அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். (வழிகெடுக்கும்) செய்த்தான்களிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்."(சூறா நஹ்ல்-36). எனக்குறிப்பிட்டுள்ளான். நபி நூஹ் (அலை) அவர்கள் காலத்தில் வாழ்ந்த நல்ல மனிதர்களே பின்னர் வணங்கப்படும் தெய்வங்களாக மாறினர்.

இது பற்றி அருள் மறை அல் - குர்ஆன் ``நிச்சயமாக நம்மிலுள்ள மடையர்கள் அல்லாஹ்வின் மீது (அவனுடைய பரிசுத்தத்தன்மைக்கு) தகாத விடயங்களைக் கூறுகின்றார்கள். ``சுவாஉ", ``எகூஸ்", ``யஊக்" ``நஸ்ர்" (ஆகிய விக்கிரகங்) களையும் விட்டு விடாதீர்கள் என்று அவர்கள் கூறி நிச்சயமாக அனேகரை வழிகெடுத்து விட்டனர். (நூர் - 23)

இப்பெயர்கள் நூஹ் (அலை) அவர்கள் காலத்தில் வாழ்ந்த நல்ல மனிதர்களின் பெயர்களாகும். இவர்கள் மரணித்த பின்னர் செய்த்தான் இவர்களைப் போன்ற சிலைகளை வடித்து அவைகளுக்கு அவர்களின் பெயர்களை வைத்து விடுமாறு செய்த்தான் அவர்களைத் தூண்டி விட்டான். அவ்வாறே அவர்களும் செய்தனர். ஆரம்பத்தில் அவர்கள் வணங்கவுமில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்கள் மறைந்தனர். புதிய சமூகம் உருவானது. அது விடயமான அறிவும் மறைந்தது. புதிய சமூகத்தவர்கள் அச்சிலைகளை வணங்க ஆரம்பித்தனர்.

இச்சரித்திர வரலாற்றுப்பாடம் மிகவும் படிப்பினைக்குரியதாகும். பெரும்பாலான மனிதர்கள் உருவப்படங்கள் எடுப்பதும், வைத்துக் கொள்வதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்டதாகவே கருதுகின்றனர். ஏனெனில் இக்காலத்தில் யாரும் உருவப்படங்களை, அல்லது சிலைகளை வணங்குவதில்லை எனவும் எண்ணுகின்றனர். ஆனால் இது தவறானது. ஏனெனில் இக்காலத்தில் நிறைய உருவங்கள், சிலைகள், படங்கள் வணங்கப்படுவதைப் பார்க்கின்றோம். ஈஸா (அலை) அவர்களும் அவர்களின் தாய் மரியம் (அலை) அவர்களும் தேவாலயங்களிலும், பாதைகளிலும் வணங்கப்படுவதனைப் பார்க்கின்றோம். படங்களை, உருவச் சிலைகளை வணங்குகின்றனர். இது போன்று எத்தனையோ பெயர்களில் மனிதர் களையும், சிலைகளையும் சிலைவடித்து, உருவங்களாக வரைந்தும் கோயில்களிலும், வீடுகளிலும் அலுவலகங்களிலும், சந்திகளிலும் வைத்து வழிபடுவதனையும், உதவி தேடுவதனையும் பார்க்கின்றோம் மிக உயர்ந்த விலைக்கு இப்படங்களும், சிலைகளும் விலைபோவதனையும் பார்க்கின்றோம். பல நடிகர்கள், அரசியல் பிரமுகர்கள், அறிஞர்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றோரின் படங்களை வைத்து சாம்பிறாணி மணம் போட்டு கண்ணியப்படுத்தி பூசிப்பதனை இன்று பரவலாகக் காணலாம். இதனாலேதான் இஸ்லாம் இவ்வாறான விடயங்களை முற்றாகத் தடைசெய்துள்ளது. அல்லாஹ் றப்பில் ஆலமீன் தனது எந்தப் பொறுப்பினையும் யாருக்கும் முற்று முழுதாக ஒப்படைக்கவில்லை. எல்லா இடங்களிலும், சந்தர்ப்பங்களிலும் தேவை ஏற்படுகின்ற போது தன்னிடமே கேட்கும்படி அல்லாஹ் கற்றுத் தந்திருக்கின்றான். மலக்குகளிடம் சில பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் அவர்கள் எவரும் தன் இஷ்டத்தின் பிரகாரம் செயல்படும் அதிகாரம் அறவே கிடையாது. அல்லாஹ்வின் உத்தரவின் பிரகாரமே சிறிய பெரிய அனைத்துக் கருமங்களையும் செய்கின்றனர். படைப்பவனும், பாதுகாப்பவனும், அழிப்பவனும் அல்லாஹ் ஒருவனே. இலாபமும், நஷ்டமும் அவன் புறத்திலிருந்தே வருகின்றது. சகல ஆட்சி அதிகாரங்களும் அவன் வசமே உண்டு. ஆட்சி கொடுப்பவனும், ஆட்சியிலிருந்து அகற்றி விடுபவனும் அல்லாஹ் ஒருவனே. இந்த உறுதியான நம்பிக்கை எமது உள்ளத்தில் ஆழமாகப் பதிய வேண்டும்.

இன்று எந்த வீட்டைப்பார்த்தாலும் உருவப்படங்கள் ஆக்கிரமித்துள்ளதைப் பார்க்கலாம். ''நாய், உருவப் படங்கள், கடமையான குளிப்புள்ளவர்கள் உள்ள வீடுகளில் (அருளுடைய) மலக்குகள் பிரவேசிக்கமாட்டார்கள்.'' என்பது நபி மொழி. பெரும்பாலான வீடுகளில் யஹூதி, நஸாறாக்களின் தந்திரோபாயங்களின் மூலமாக உருவப்படங்கள் நுளைந்து விடுகின்றது. ஒவ்வொரு வீடுகளிலும் இறைவனைத் தூசிக்கும் இணைவைக்கும் பாடல்களும், நாஸ்திகப் பாடல்களும் வானொலி, தொலைக்காட்சி மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்பப்படுவதனை அன்றாடம் கேட்கின்றோம். அதை விட ஒரு படி மேலாக வீட்டுக்குள்ளேயே பிரித் ஓதும் நிகழ்ச்சிகளும் இணைவைப் பவர்களின் பல்வேறு மதச் சடங்குகளும் நடை பெறுகின்றது. வீட்டார் அனைவரும் அதைப் பார்த்தும் கேட்டும், ரசித்தும் காலம் தள்ளுவதை அடிக்கடி காணக்கூடியதாக உள்ளது. இதே போன்று உருவப்படங்களையும் அரை நிர்வாண ஆபாசப்படங்களையும் கொண்ட கலண்டர்கள், வீட்டார்களின் போட்டோக்கள் மரணித்த உறவினர்களின் உருவப்படங்கள் நடிகர்கள், நடிகைகள் விளையாட்டு வீரர்கள் போன்றோரின் உருவப் படங்கள் என்பனவும் இன்று வீட்டுக்குள் அலங்காரமாக வைக்கப்பட்டு அவற்றிற்கு சில இடங்களில் மாலையிடப்பட்டு, மணக்குச்சிகளும் கொளுத்தப்பட்டு கண்ணியப்படுத்தப்படுகின்றது. இதற்கு முன்னோடிகளாக சில கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், சில அலுவலகங்கள் விளங்குகின்றன. இது போன்றே அழகுக்காக என்று உருவங்களாக உள்ள விளையாட்டுப் பொருட்களை வாங்கி வீட்டின் முன் அலுமாரிகளில் காட்சிக்கென்றே வைக்கின்றனர். உதாரணமாக மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் என்பன வற்றைக் குறிப்பிடலாம். இவை அனைத்தும் இறைவனின் பேரருளைத் தூரமாக்கிவிடும் செயல்களாகும்.

ஒரு முறை ஆயிஷா சித்திகா (றழி) அவர்கள் உருவப்படங்கள் உள்ள ஒரு திரைச் சீலையை வீட்டில் தொங்க விட்டிருந்தார்கள். வீட்டில் நுழைந்த நபியவர்கள் அவ்விடத்திலேயே நின்று விட்டார்கள். நபியவர்கள் முகத்தில் கோபத்திற்கான அறிகுறிகள் தென்பட்ட போது, அல்லாஹ்விடமும் அவன் தூதரிடமும் தௌபாச் செய்கின்றேன் என்று சொல்லியவராக, நான் என்ன தவறு செய்தேன் என்றார்கள். அதற்கு நபியவர்கள் திரைச்சீலையைப் பற்றி விசாரித்தார்கள் அதற்குள் ஆயிஷா (றழி) அவர்கள் இதனை விரித்து அமர்ந்து கொள்வதற்காகவும், தலையணைக்காகவும் வாங்கினேன் என்றார்கள். உடனே நபியவர்கள் இந்த உருவங்கள் செய்தவர்கள் (வரைந்தவர்கள்) இறுதி நாளில் வேதனை செய்யப்படுவார்கள். அவர்களுக்கு, ''நீங்கள் உருவாக்கியவைகளுக்கு உயிர் கொடுங்கள் என்று சொல்லப்படும். பின்பு நபியவர்கள் எந்த வீட்டில் உருவப்படங்கள் இருக்கின்றதோ அங்கு மலக்குகள் நுழைய மாட்டார்கள் எனக் கூறினார்கள்.

(ஆதாரம் புகாரி, முஸ்லிம்)

மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் ''கியாமத்து நாளில் மிகக் கடுமையான வேதனைக்குரியவர்கள் அல்லாஹ்வுடைய படைப்பான உயிரினங்கள் போன்று உருவங்கள் செய்பவர்களும். வரைபவர்களுமாகும்.''

(புகாரி, முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரு முறை வீட்டில் உருவப்படங்களைக் கண்ட போது அது அழிக்கப் படும்வரை நபியவர்கள் நுழையவில்லை. (புகாரி)

ஒரு தடவை இதுபற்றி விளக்கும் போது ''வீட்டில் உருவப்படங்கள் வைப்பதனையும், அதனைச் செய்வதனையும் நபியவர்கள் தடுத்தார்கள். (திர்மிதி)

எனவே, உருவப்படங்களையோ உருவங்களையோ வீடுகளில், கடைகளில், காரியாலயங்களில் தொங்கவிடுவதை முற்று முழுதாக தவிர்ந்து கொள்வோம். சில வேளைகளில் ''புறாக்'' என்ற பெயரில் பெண்ணுருவம் கொண்ட கோவேறு கழுதை, எழுத்தணி என்ற பெயரில் சில உருவங்கள், தலைவர்கள் என்ற பெயரில் சில உருவங்கள் அனைத்தையும் முற்றாக விட்டொழிப்போம். றஹ்மத்துடைய மலக்குகள் வீடுகளில் நுழைய வழி விடுவோம்.

ஹஸ்றத் அபூவாயில் (றஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு முறை நான் உமர் (றழி) அவர்களுடன் சிரியா நாட்டிற்கு யுத்தம் ஒன்றிற்காகச் சென்றிருந்த போது அப்பகுதியைச் சேர்ந்த தலைவன் ஒருவன் உமர் (றழி) அவர்களைத் தேடி வந்து அவர்களைக் கண்டதும் உடனே சஜதாவில் வீழ்ந்து விட்டான். உமர் (றழி) அவர்கள் ஏன் இப்படிச் செய்கின்றாய் என்று கேட்ட போது அம்மனிதன், எங்கள் மன்னர்களுக்கு இப்படித்தான் சிரம் சாய்ப்போம் எனக் கூறினான். உடனே உமர் (றழி) அவர்கள் வணங்குவதற்குத் தகுதியானவன் உன்னைப்படைத்த அல்லாஹ் மட்டும்தான். அவனை மட்டுமே நீ சஜதா செய்ய வேண்டும் என்றார்கள். பின்னர் அத்தலைவன் உமர் (றழி) அவர்களிடம் நான் உங்களுக்காக உணவு தயார் செய்துள்ளேன். ஏழையாகிய எனது வீட்டுக்கு நீங்கள் வரவேண்டும் என்று இரந்து நின்றான். அதற்கு உமர் (றழி) உனது வீட்டில் உருவப்படங்கள் உள்ளனவா எனக் கேட்ட போது ''ஆம்'' எனக் கூறினான், அப்படியானால் அவ்வாறான இடத்திற்கு என்னால் வர முடியாது எனவே உணவை இங்கே அனுப்பிவிடும் என்று கூறினார்கள். பின்னர் வந்த உணவைச் சாப்பிட்டார்கள். (ஹாக்கிம்)

அனைத்து நோய்களுக்கும் அருமருந்து.
'குறத்துல் பாத்திஹாவில் அனைத்து நோய்களுக்கும் மருந்துண்டு என நபியவர்கள் கூறிய மணி மொழியினை அப்துல் மலிக் இப்னு உமைர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் (பைஹகீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைத்தல் தடைசெய்யப்பட்டதா?

நமது காலத்தில் வழக்கத்தில் உள்ளது போல் நபியவர்கள் காலத்தில் புகைத்தல் வழக்கத்தில் இருக்கவில்லை. எனினும் இஸ்லாமிய சரீஅத்தில் எல்லாவிடயங்களைப்பற்றியும் தெளிவான தீர்வுகளைக் காணமுடியும். இதன் அடிப்படையில் புகைத்தல் பற்றி ஆராய்வோம்.

ஒரு மனிதன் தனது உடலுக்கும், உடமைகளுக்கும் தீங்கிழைத்துக் கொள்வது தடுக்கப்பட்டதாகும். இது போன்றே தன் சகோதரனுக்கு கஷ்டத்தையும், நஸ்டத்தையும் கொடுப்பதும் தடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி இறைவன் தனது மறையில் குறிப்பிடும் போது, ''அவர்களுக்கு நல்ல வற்றை அல்லாஹ் ஹலாலாக்கி கெட்டவற்றைத் தடைசெய்துள்ளான்.
(சூறா அல்றாப்)

புகைத்தலினால் அருவருப்பான நாற்றம் வெளியாகுவதுடன் உடலுக்கு கேட்டையும் உருவாக்குகின்றது. ''உங்கள் கரங்களினால் உங்களை அழிவில் போட்டுக்கொள்ளாதீர்கள்.'' (பகறா)

(புகைத்தல் புற்றுநோய்க்குக் காரணமாக அமைந்துள்ளது. 1994ம் வருடம் சுமார் 35 இலட்சம் மக்கள் புகைத்தலினால் ஏற்பட்ட புற்றுநோயின் காரணத்தினால் மரணமடைந்துள்ளனர். என ஆய்வு அறிக்கைகள் கூறகின்றன)

''உங்கள் நப்சுகளை நீங்கள் கொலை செய்து விடாதீர்கள்.''
(சூறா நிசா)

(புகைத்தல் மூலமாக மனிதன் தனது உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துக் கொள்கிறான். ஒரு சிகரட்டில் சுமார் 600 நெக்கோட்டின் கிருமிகள் இருப்பதாக வைத்தியர்கள் கூறுகின்றனர்.)

குடி, சூதாட்டம் என்பனவற்றின் கெடுதி பற்றி அருள் மறை குறிப்பிடும் போது அந்த இரண்டினதும் ஆபத்துக்கள் அவற்றிலுள்ள பயனைவிடப் பாரதூரமானது எனவே, தவிர்ந்து கொள்ளுங்கள் என அறிவுரை பகர்கிறது. புகைத்தல் முற்று முழுதாக கேடுவிளைவிப்பதாகும். நபியவர்கள் ஒரு முறை குறிப்பிடும் போது ''பொருளை வீண்விரயம் செய்வதை உங்களுக்கு அல்லாஹ் தடை செய்துள்ளான்'' என உபதேசித்தார்கள்.
(புகாரி, முஸ்லிம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் கூறிய பொன்மொழியின் அடிப்படையில் புகைத்தல் பொருளாதாரத்தை அழித்து விடுகின்றது. "யார் வெள்ளைப்பூடு அல்லது வெங்காயம் சாப்பிடுகின்றாரோ அவர் எங்களை விட்டும் நீங்கி இருக்கட்டும். எங்கள் பள்ளி வாசலை விட்டும் நீங்கி இருக்கட்டும் அவருடைய வீட்டில் இருந்து கொள்ளட்டும்" என்றார்கள். (புகாரி, முஸ்லிம்)
இந்த ஹதீதுடன் புகைத்தலை ஒப்பிடும் போது வெங்காயம், வெள்ளைப்பூடு என்பனவற்றை விட புகைப்பிடித்தல் மிகவும் அருவருப்பான வாடையுடையதாகும்.

எனவே, இது மிகவும் விலக்கப்பட வேண்டியதாகும். தற்போதைய சந்தைவிலையினை நோக்கும் போது ஒரு பக்கட் (10 சிகரட்) கொண்ட பக்கடின் விலை (40/-) நாற்பது ரூபா என வைத்துக் கொண்டால் சாதாரணமாக (20) இருபது சிகரட்டுக்களைப் பிடிப்பவர்கள் இருக்கின்றார்கள். இவர்களது ஒருமாதச் செலவு (2,400/-) இரண்டாயிரத்து நானூறு ரூபா. வருடத்திற்கு (28,800/-) இருபத்து எட்டாயிரத்து எண்ணூறு ரூபாய். இவ்வாறானவர்கள் ஐந்து வருடத்திற்கு புகைத்தலை விட்டுவிட்டுப் பணத்தைச் சேமிக்க ஆரம்பித்தால் (1,44,000/-) ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் ரூபா தேறிவிடும். அல்லாஹ்வுடைய வீட்டை ஹஜ்ஜு செய்வதற்கு போதுமான பணம் வந்து சேர்ந்துவிடும்.

புகைத்தலினால் வருடத்திற்கு 36 இலட்சம் மக்கள் மரணத்தைத் தழுவுகின்றனர். என்ற அதிர்ச்சியான தகவல் ஒன்றே இதன் ஆபத்தை உணரப்போதுமானது. எனவே, புகைத்தலை ஒழித்து உயிரையும், பொருளையும் பாதுகாப்போம்.

**புகைத்தலின் தீங்குகள்.**

01. புகைப்பதனால் புற்று நோய் வருகின்றது.
02. கஸ்டப்பட்டு உழைத்த பொருள் அழிந்து விடுகின்றது.
03. சூழல் மாசடைகிறது.
04. தன்னுடைய குடும்பத்திற்கு செலவு செய்ய வேண்டிய பணம் வீண் விரயம் செய்யப்படுவதனால் குடும்பத்திற்கு அநியாயம் புரிகின்றான்.
05. வாயின் துர்நாற்றத்தினால் மற்றவர்களின் வெறுப்புக்கு ஆளாகின்றான்.
06. புகைப்பிடிப்பவன் உடல் நோய்க்கு ஆளாவது போல பக்கத்தில் இருந்து சுவாசிக்கும் மனிதனும் அதே நோயினால் பீடிக்கப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

07. சில வேளைகளில் மரியாதைக்குரியவர்கள் முன்னிலையில் கூட இக்கெட்ட பழக்கத்தினால் புகைப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு, தனது கண்ணியத்தையும் மதிப்பையும் இழந்து விடுகின்றான்.

08. சில சந்தர்ப்பங்களில் தனது பிள்ளைகள் இதே தவறினைச் செய்ய முற்படும் போது தடுக்க முடியாத நிலைக்கு ஆளாகின்றான்.

09. சிகரட் பக்கட்டுக்களிலே இதன் கெடுதி பற்றிய எச்சரிக்கை வசனங்கள் உள்ளன.

யாராவது ஒருவர் பண நோட்டுக்களை எரித்தால் அவரைப் பார்த்து பைத்தியம் என்போம். அப்படியானால் பணத்தைக் கொடுத்து நாற்றத்தையும், உடலுக்கு நோயையும் வாங்கி, சுத்தமான காற்றை மாசடையச் செய்வதோடு மற்ற மனிதனுக்கு கஸ்டத்தையும், பிரச்சினையையும் கொடுக்கும் மனிதனைப் பற்றி என்ன சொல்ல முடியும். அவன் பண நோட்டை மட்டும் எரிக்கின்றான். இம்மனிதன் பணத்தைக் கொடுத்து இத்தனை ஆபத்துக்களை வாங்கிய பின் பணத்தை எரிக்கின்றான்.

எனவே, புகைப்பதனை விட்டு விடுவோம். அதன் வழியில் நம் சமூகத்தைப் பாதுகாப்போம். கெடுதியினை நாமும் உணர்வோம். மற்றவர்களுக்கும் உணர்த்துவோம்.

பாடல்களால் விளையும் பரிதாபம்.

ஏந்தல் நபி (ஸல்) எடுத்துரைத்தார்கள். ஒரு கூட்டத்தினர் இரவு நேரத்தில் உண்பதிலும், குடிப்பதிலும், வீண் கேளிக்கைகளிலும் நேரத்தைக் கழித்துக் கொண்டிருப்பார்கள். விடிந்த பிறகு அவர்களது முகங்கள் குரங்கு, பன்றி போன்ற முகங்களாக மாற்றப்பட்டிருக்கும். மற்றும் சிலர் பூமியில் புதையுண்டு போவார்கள். இன்றிரவு இன்ன குடும்பத்தினர் புதையுண்டு போயினர். இன்ன வீடு புதைந்து போயிற்று என்று மக்கள் பேசிக் கொள்வார்கள். சிலர் மீது நபி நூஹ் (அலை) காலத்தில் பொழிந்தவாறு கல்மாரி பொழிந்து கொண்டிருக்கும். மற்றும் சிலர் புயலால் அழிந்து போயிருப்பர். இப்படியெல்லாம் நடப்பதற்கான காரணம் அவர்கள் மது அருந்தி, ஆண்கள் பட்டாடை அணிந்து, பாடகிகளை வைத்து ஆடல் பாடல்களைக் கேட்டுக் கொண்டு வட்டிவாங்கித்தின்று, உறவு முறையை முறித்து நடந்து கொண்டதுதான்.

(ஆதாரம் - துர்ருல் மன்தூர்)

அருள் மறையின் அருமருந்து.

01. சூரா பாத்திஹாவிலே முழு நோய்க்கும் மருந்துண்டு.
02. அன்றாடத் தேவையை நிறைவு செய்ய சூரா யாசீன்.
03. வறுமையின் விடுதலைக்கு சூறாவாக்கிஆ.
04. கப்றுடைய வேதனையிலிருந்து சூறா முல்க்.
05. தஜ்ஜாலின் கெடுதியில் இருந்து தப்பித்துக்கொள்ள சூறா கஹ்ப்.
06. ஆனியத்திலிருந்து பாதுகாப்பு பெற சூறா பலக் சூறா நாஸ்.
07. வீட்டிலிருந்து செய்த்தானை விரட்ட சூறா பகறா. (மன்தூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருட்களின் விபரீத விளைவு.

இன்று உலகத்தைப் பிடித்துள்ள மிகப் பயங்கரவாதம் போதைப்பொருள் பாவனையாகும். மாபெரும் வல்லரசுகளைக் கூட அச்சுறுத்திக் கொண்டிருப்பதும் இதே போதைப் பொருள்தான். போதைப் பொருட்கள் மனித இனத்தின் அறிவையும், ஆத்மாவையும் கெடுத்துவிடுகின்றன. போதைப் பொருளுக்கு அடிமையானோர் தமது பொருளை இழந்து குடும்பத்தைக் குட்டிச் சுவராக்கி அழிவிலும், இழிவிலும் மூழ்கி விடுகின்றனர்.

போதைப் பொருட்கள் திண்மமாகவும், திரவமாகவும் பல வடிவங்களில் உள்ளன. கள், சாராயம், கஞ்சா, அபின், ஹஸீஸ், ஹிரோயின், கொக்கோயின், மர்ஜுவானா என்று பல்வேறு பெயர்களிலும் பாவனையில் உள்ளன. இவைகளுக்கு அடிமையானோர் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி இறுதியில் மரணத்தின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுக் கொள்கின்றார்கள். சிலர் அறிவை இழந்து பைத்தியம் ஆகிவிடுகின்றனர்.

இதனாலேதான் இஸ்லாம் ''போதை ஊட்டக் கூடிய பொருட்கள் அனைத்தும் நஜீஸானவைகளாகும். அவற்றைப்பாவிப்பது ஹறாம்." அது கொஞ்சமாக இருந்தாலும் சரிதான் என தெளிவான சட்டம் வகுத்துள்ளது. இதுமட்டுமன்றி நபியவர்கள் ''கள் பாவமனைத்தினதும் மொத்தமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மனிதனின் எல்லாப் பாவச்செயல்களுக்கும் தலைவாயிலாக இருப்பது போதைப் பொருளாகும் என்பதை தினசரிப் பத்திரிகைச் செய்திகளின் மூலம் தெரிந்து கொள்கின்றோம். இக்கொடிய பழக்கம் பாடசாலை மாணவர்களைக் கூட இப்போது ஆக்கிரமித்துள்ள நிகழ்ச்சி அதிர்ச்சியூட்டும் செய்தியாகும். தீய நண்பர்களோடு இணைந்து பொழுது போக்குகளுக்காகச் செல்கின்றபோது இவ்வாறான பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விடுகின்றனர். இதற்காக பணம் தேவைப்படும்போது களவு செய்வதற்கு முற்படுகின்றனர். அது கை கூடாத போது கொலை செய்வதற்கு துணிந்து விடுகின்றனர்.

இன்று சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்ற அனேகர் போதைப் பொருட்களோடு தொடர்புபட்டவர்கள் என்பது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. போதைப் பொருள் வர்த்தகம் பல கோடி ரூபாய்ப் பணச் சுழற்ச்சி கொண்ட பலம் வாய்ந்த பல இயக்கங்களைப் பின்னணியாகக் கொண்ட வர்த்தகமாக உருவெடுத்துள்ளமை நாட்டுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாகும். இளம் தலைமுறையினரின் எதிர்காலத்தினைக் கேள்விக் குறியாக்கிவிடும் ஒரு பயங்கர ஆபத்தாகும்.

போதைப் பொருள் பாவிப்போர் இலகுவாக எய்ட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய்க்கு ஆளாகிவிடுகின்றனர். குழுக்களாக போதைப் பொருட்களை ஊசி மூலம் ஏற்றிக் கொள்ளும் போது இவ்வாறான ஆபத்திற்குள் மாட்டிக் கொள்கின்றனர். போதைப் பொருள் உட்கொண்ட காரணத்தினால் அன்றாடம் பல வாகன விபத்துக்கள் நிகழ்கின்றன. இதே போன்று போதை தலைக்கேறியதும் அற்பவிடயங்களுக்காகத் தனது மனைவியை, குழந்தைகளை, நண்பர்களை கொலை செய்தும் விடுகின்றனர்.

கௌரவமான குடும்பங்களில் கண்ணியமான பதவிகளில் இருப்பவர்கள் கூட போதைப் பொருளுக்கு அடிமையான காரணத்தினால் கேவலத்தையும், இழிவையும், அவமானத்தையும் சுமக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. போதைப் பொருள் பாவிப்போர் அல்லாஹ்வின் மன்னிப்பிலிருந்து தூரமாகி விடுகின்றனர். தொடர்ந்து போதைப் பொருளுக்கு அடிமையானோர் கலிமாவை இழந்து மரணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகிவிடுகின்றனர்.

எனவே, போதையூட்டும் பொருட்களிலிருந்தும் நாம் பாதுகாப்பாக வாழ்வதோடு நமது குடும்பங்களையும், சமூகத்தையும் பாதுகாப்போம். அல்லாஹ்வின் அருள் பெறுவோம்.

**விபச்சாரம் மெலிந்தால் மரணங்கள் பெருகும்.**

ஹஸ்றத் அப்துள்ளா இப்னு அப்பாஸ் (ரழி)கூறுகின்றார்கள்.

01. எந்தச் சமுதாயத்தில் மோசடி செய்யும் பழக்கம் அதிகமாக இருக்கின்றதோ அச்சமுதாய மக்கள் உள்ளத்திலே அல்லாஹ் எதிரிகள் பற்றி அச்சத்தைப் போட்டு விடுகின்றான். அந்த சமுதாயத்தில் மரணங்கள் அதிகரிக்கும்.
02. எந்த ஒரு கூட்டம் அளவையிலும், நிறுவையிலும், மாறுசெய்கின்றதோ அந்தக் கூட்டத்திற்கு இரணம் குறைந்து போய்விடும்.
03) எந்தக் கூட்டம் நீதிக்குப் புறம்பாக தீர்ப்பளிக்கின்றதோ அந்தக் கூட்டத்தாரிடையே கொலைகள் அதிகம் நிகழும்.
04) எவர்கள் வாக்குறுதி மீறுகின்றார்களோ அவர்கள் மீது அல்லாஹ் எதிரிகளைச் சாட்டி விடுவான். (ஆதாரம் - மிஸ்காத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-குர்ஆனின் அற்புதப் பயன்கள்.

வான்மறை அல்குர்ஆனை அல்லாஹ் எமக்கு வழிகாட்டியாகத் தந்துள்ளான். படைப்புக்களில் சிறந்த படைப்பு மனித இனம். மனித இனம் மாசு மாறுவற்று மனிதப் புனிதர்களாக வாழ்ந்து இம்மையிலும் மறுமையிலும் இவர்கள் ஈடேற்றம் பெற வேண்டும் என இறைவன் விரும்புகின்றான். இதனை நிறைவு செய்வதற்காகவே, காலத்துக்குக்காலம் நபிமார்களையும், வேதங்களையும் அருளினான்.

இந்த நீண்ட தொடரில் இறுதியாக வந்தவர்கள் தான் நற்குணத்தின் தாயகம் நானிலத்தின் நாயகம் எங்கள் தலைவர் நபி முஹம்மது (ஸல்) அவர்கள்- இறுதி முத்திரையாக விண்ணுக்கும் மண்ணும் அறபிகளுக்கும், அஜமிகளுக்கும், மனிதர்களுக்கும், ஜின்களுக்கும் இறுதி நாள் வரை நபியாக அனுப்பப்பட்டார்கள். இவர்களுக்கு அருளப்பட்ட மறைபொருள் வேதமே அருள்மறை அல்குர்ஆன். முப்பத்தைந்துக்கு மேற்பட்ட திருநாமங்களால் தேன்சொட்ட அழைக்கப்படும் இத்திருவேதம் 'இக்றஃ' என்னும் முதல்வசனத்தோடு ஆரம்பித்து இருபத்திமூன்று வருடகால எல்லையில் தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப இறக்கிவைக்கப் பட்டது. ஓதுவோரின் உள்ளங்களை உணர்ச்சி வெள்ளத்தினால் உருக்கி உள்ளத்தெளிவை உருவாக்கிவிடுகின்றது இம்மை, மறுமை இரு உலகங்களையும் விபரிக்கின்றது. மண்ணையும், விண்ணையும் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது. ஓர் அறிவுச்சுரங்கம் இலக்கியத்தின் இருப்பிடம் கலைகளின் கணை சரித்திர வரலாறுகளின சான்றுகளோடு கூடிய ஆதாரம். விஞ்ஞானம் நிறைந்துள்ள வித்து மெஞ்ஞானக் கருவூலங்களின் மாபெரும் சொத்து. மாபெரும் நோய்களுக்கு மாமருந்து. இதயக் குருட்டை இல்லாமலாக்கி விடுகின்றது. அகிலத்தில் அல்-குர்ஆனை மனனமிட்ட உள்ளங்கள் இலட்சோப லட்சம். ஒரு அட்சரத்தைக்கூட அசைக்க முடியாது. காலத்திற்கேற்ப திருத்திய பதிப்புக்கள் இத்திருமறையில் கிடையாது. மாறாத, மறையாத, குன்றாத சுவையோடு எல்லாக் காலத்திற்கும் இசைவானதாக உள்ளங்களில் உறுதியாகப் பதிவு பெற்றுள்ள மாபெரும் பொக்கிசம் இம்மாமறை அல்-குர்ஆன்.

நூறு ஒட்டகங்களுக்காகத் தூதர் நபியின் தலையைத் துண்டிக்கச் சென்ற உமர் (றழி) அவர்கள் அருள் மறையின் ஆகர்ண சக்திக்கு அடி பணிந்து இஸ்லாத்தில் இணைந்த கதை அற்புதமானதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் மறையின் அற்புதச் சக்திக்கு கவரப்படக் கூடாது எனக்கருதி காதுகளில் வைக்கப்பட்ட பஞ்சோடு க.்.பாவை வலம் வந்த துபைல் என்பார் அண்ணல் நபியின் அருள் மறை வசனத்தில் கட்டுண்டு கவரப்பட்டு இஸ்லாத்தில் இணைந்து கொண்ட வரலாறு அனைவரும் அறிந்ததே. சுத்தமானவர்களைத் தவிர மற்றெவரும் தொடக் கூடாது. என வரையறை செய்த வான் மறைக் குர்ஆன் இறையச்சம் உள்ளோருக்கு ''ஹிதாயத்'' என்னும் இனிய வழிகாட்டுகின்றது. இந்தப் பார் போற்றும் மாமறையைப் பார்ப்பதற்கும், தொடுவதற்கும். சுமப்பதற்கும், சிந்திப்பதற்கும் மேலான நன்மை கிடைக்கிறது. அருள்மறை மூலம் உயர்ந்தவர்கள் பற்றி உம்மிநபி குறிப்பிடும்போது எனது உம்மத்தில் மிகச்சிறந்தவர்கள் குர்ஆனைச் சுமந்தவர்கள் என்றார்கள். இறுதிநாளில் கூட இறைமறையை மனனமிட்ட ஹாபிழ் பத்து நபர்களை சுபனபதிக்கு அழைத்துச் செல்கிறார் என்றார்கள் ஏந்தல் நபி. எனவே இம்மாமறையின் மகிமை. அருள்மறையின் சூறாக்கள் அள்ளித்தருகின்ற அற்புதப் பயன்களை நோக்குங்கள் திருமறையினைக் கற்றுக்கொண்ட மனிதனுக்கு நபியவர்கள் கொடுத்த கௌரவத்தைப் பின்வரும் சம்பவம் தெளிவுபடுத்திக்காட்டுகின்றது.

ஒரு முறை நபியவர்கள் பல நபர்களைக்கொண்ட ஒரு ஜமாஅத்தை அனுப்பிவைத்தார்கள். அப்போது அவர்கள் ஒவ்வொருவரையும் குர்ஆனை ஓதும்படி கேட்டுக்கொண்டார்கள். வயதில் குறைந்த இஸ்லாத்தில் புதிதாக இணைந்துகொண்ட ஒருவர் வந்தார் நபியவர்கள் உன்னிடம் என்ன இருக்கிறது எனக் கேட்டார்கள். என்னிடம் சூறத்துல் பகறாவும் இன்ன இன்ன சூறாக்களும் உண்டு என பதில்கூற, உடனே நபியவர்கள் உன்னிடம் சூறத்துல் பகறாவிருக்கிறதா எனக்கேட்க ஆம் என பதில் கொடுத்தார். நபியவர்கள் நீங்கள்தான் அவர்களது அமீர் எனக்கூறினார்கள். இதைக்கேட்ட மிகவும் கண்ணியத்திற்குரிய ஒருமனிதர், அல்லாஹ் மீது சத்தியமாக நான் குர்ஆன் கற்றுக்கொள்வதைத்தடுத்தது, கற்றதை எடுத்து நடக்கவேண்டுமே என்ற பயம்தான் எனக்கூறினார்கள். அதற்கு நபியவர்கள் குர்ஆனை கற்றுக்கொள்ளுங்கள் அதனை ஓதியும் வாருங்கள் குர்ஆனைக்கற்று அதனை கற்றுக் கொடுத்து அதனை ஓதிவரும் மனிதனுக்கு உதாரணம் கஸ்தூரி நிரப்பப்பட்ட ஒருபையைப் போன்றதாகும் அதன் மணம் எல்லா இடங்களிலும் பரந்து வீசிக்கொண்டிருக்கும். குர்ஆனைக்கற்று உள்ளத்தில் வைத்துத் தூங்கிவிடும் மனிதனுக்கு உதாரணம் கஸ்தூரி கட்டப்பட்ட ஒருபையைப் போண்றதாகும் என மொழிந்தார்கள். இப்பொன்மொழியை அபு ஹுறைறா (ரழி) அறிவித்துள்ளார்கள்.

(ஆதாரம் திர்மிதி இப்னுமாஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருள்மறை அல்-குர்ஆனின் அற்புதங்கள்.**

அலிப், லாம், மீம் இது அல்லாஹ்வின் வேதமாகும். இதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இறையச்சம் உடையோருக்கு (இது) சிறந்த வளிகாட்டியாகும். (பகறா 1,2,3) ``அல்லாஹ் இந்த திருமறைமூலம் பல மனிதர்தளுக்கு நேர்வழிகாட்டுகின்றான்'' (அல்-குர்ஆன்)

``நாம் அல்-குர்ஆனின் மூலமாக மு.:.மீன்களுக்கு நோய்நிவாரணியையும், அருளையும் இறக்கிவைத்துள்ளோம். இது அனியாயம் புரிவோருக்கு நஷ்டத்தைத் தவிர வேறு எதனையும் அதிகரிக்கமாட்டாது? (அல்-குர்ஆன்)

**அல்-குர்ஆனை மனனம் செய்த ஹாபிழின் உயர்வு.**

எவர் அருள் மறை அல்-குர்ஆனை ஓதி அதனை மனனம் செய்து அதில் ஹலால் எனக்கூறப்பட்டதை ஹலால் என்றும், ஹறாம் என்று கூறப்பட்டதை ஹறாம் என்றும் உறுதியாக நம்பி அமல் செய்கின்றாரோ அவரை அல்லாஹ் சுவனபதியில் நுளையச் செய்கின்றான். மேலும் அவருடைய குடும்பத்தில் நரகம் கட்டாயமாக்கப்பட்ட பத்து நபர்களுக்கு அவருடைய சிபார்சையும் ஏற்றுக்கொள்வான் என அலி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (திர்மிதி - அஹ்மது)

ஹாபிழின் மதிப்பு எத்தனை உயர்ந்தது என்பதற்கு மேற்கூறப்பட்டுள்ள ஹதீஸ் சிறந்ததோர் உதாரணமாகும். ஒன்றில் நாம் ஹாபிழாக வேண்டும், அல்லது நமது பிள்ளைகளில் ஒன்றையேனும் ஹாபிழ் ஆக்கலாம். அதற்கும் சந்தர்ப்பம் கிட்டாவிடில் தமது உறவினர்களில் ஒருவரையேனும் ஹாபிழாக்கி விட்டால் இம்மாபெரும் பாக்கியத்தை நாமும் அடைந்து கொள்ளலாம்.

**உளத்துருவைப் போக்கும் உயர் மறை அல்-குர்ஆன்.**

``விடயம் அவ்வாறல்ல அவர்கள் சம்பாதித்த தீமைகளினால் அவர்களுடைய இதயங்கள் துருப்பிடித்துப் போய்விட்டன'' (83-14)

``தண்ணீர் பட்டால் இரும்பு துருப்பிடித்து விடுவது போன்று இந்த உள்ளங்களும் துருப்பிடித்து விடுகின்றன'' என நபியவர்கள் கூறிய போது ``யாரசூலல்லாஹ்! அத்துருவைப் போக்குவது எது என கேட்கப்பட்டது'' அதற்கு நபியவர்கள் ``அதிகமாக மரணத்தை நினைப்பதும் அருள் மறை அல்-குர்ஆனை ஓதுவதுமாகும்'' எனப் பதிலளித்தார்கள். இம் மொழியினை இப்னுஉமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (பைஹகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வல்ல அல்லாஹ்வின் உறவினர்கள்.**

''மனிதர்களில் அல்லாஹ்வுக்குச் சொந்தமான சில உறவினர்கள் இருக்கின்றனர். என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது யாரசூலல்லாஹ்! அவர்கள் யார் என அன்புத் தோழர்கள் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அவர்கள் குர்ஆன் உடையவர்கள், அவர்கள்தான் அல்லாஹ்விற் குரியவர்கள். அவனுக்குச் சொந்தமானவர்கள்" எனப் பதிலளித்தார்கள். இப்பொன் மொழியை அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(நசாயி, இப்னு மாஜா)

**அனைத்து நோய்களுக்கும் அருமருந்து.**

''சூறத்துல் பாத்திஹாவில் அனைத்து நோய்களுக்கும் மருந்துண்டு" என நபியவர்கள் கூறிய மணி மொழியினை அப்துல் மலிக் இப்னு உமைர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (பைஹகீ)

**வறுமை நீங்கி வளம் பெறுக.**

''சூறா" வாக்கியாவை ஒவ்வோர் இரவிலும் ஓதி வருபவருக்கு ஒரு போதும் வறுமை ஏற்படாது என நபியவர்கள் கூறினார்கள். இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் ஒவ்வோர் இரவிலும் அதனை ஓதி வருமாறு தங்களுடைய பெண்மக்களிடம் கூறி வந்தார்கள். (பைஹகி)

**அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும் அதிசய சூறா.**

அருள் மறையில் முப்பது ஆயத்துக்களைக் கொண்ட ஒரு சூறா இருக்கின்றது. அதனை ஓதுகின்ற மனிதனுக்கு அவனது பாவங்கள் மன்னிக்கப்படும்வரை அது சிபாரிசு செய்யும் அது தான் தபாறகல்லதி சூறாவாகும். என நபியவர்கள் கூறிய பொன்மொழியை அபூஹுறைறா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (அபுதாவூத் நசாயி, இப்னுமாஜா)

**கலவரங்களின் போது நிம்மதி பெற வழி.**

ஹஸ்றத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சமுகத்தில் ஆஜராகி விரைவில் கலவரங்கள் ஏற்படும் எனக் கூறிய போது அவற்றை விட்டும் தப்பித்துக் கொள்வதற்கு வழி என்ன என விசாரித்தார்கள். அதற்கு ஜிப்ரீல் அலை அவர்கள் அல்லாஹ்வின் வேதம் அல்-குர்ஆன் எனப் பதில் கொடுத்தார்கள். எனும் பொன் மொழியினை இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

எனவே,

அனுதினமும் அருள்மறை ஓதுவோம்,

அதன் படி வாழ்வோம்,

ஈருலகிலும் ஈடேற்றம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணல் நபியின் அழகிய நற்குணங்கள்.

நீங்கள் அண்ணல் நபியின் உண்மை நேசனாக இருந்தால் அவர்களின் நற்குணங்களை அணிகலன்களாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

01. கெட்ட விடயங்கள் அனைத்தையும் விட்டொதுங்குங்கள். சொல், செயல் அனைத்திலும் கேவலமான, இழிவான விடயங்களையும் அல்லாஹ்வின் வெறுப்புக்குள்ளானவைகளையும் விட்டுவிடுங்கள்.

02. சத்தத்தைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். பள்ளிவாசல்கள், பாட சாலைகள், சந்தை, மக்கள் கூடக் கூடிய இடங்கள் பொதுவாக எல்லா இடங்களிலும் குறிப்பாக உங்கள் வீடுகளிலும் பணிவான குரலில் பக்குவமாகப் பேசிக் கொள்ளுங்கள்.

03. யாராவது உங்களுக்கு ஏதேனும் தவறிழைத்து விட்டால் மன்னித்து நற்பண்போடு நடந்து கொள்ளுங்கள், விரோதம் பாராட்டாதீர்கள்.

04. உங்களுடைய வேலையாட்கள், நண்பர்கள், குழந்தைகள், மாணவர்கள் அனைவரிடமும் அன்பாக நடந்து கொள்ளுங்கள். அவர்களுடைய பணிவிடைகளில் குறைகள் செய்து விட்டால் கடின வார்த்தைகள் கூறாமல் கனிவோடு நடந்து கொள்ளுங்கள்.

05. உங்கள் கடமைகளைச் சீராகச் செய்யுங்கள். பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் குறை வைக்காதீர்கள்.

06. வெடிச்சிரிப்புச் சிரிக்காதீர்கள், சிரிப்பதாக இருந்தால் புன்னகையாக சிரியுங்கள்.

07. ஏழைகள், அநாதைகள், அங்கவீனர்கள் ஆகியோரின் தேவைகளைத் தாமதிக்காமல் நிறைவேற்றி வையுங்கள். அவர்களுடன் பழகும் போது இரக்கத்தோடும், அன்போடும் பழகிக் கொள்ளுங்கள்.

08. வீட்டு வேலைகளில் வீட்டாருக்கு உதவி ஒத்தாசையாக இருந்து கொள்ளுங்கள். வீடு சுத்தம் செய்வதிலே, ஆடை கழுவுவதிலே, உணவு சமைப்பதிலே உதவி செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. இருக்கின்ற ஆடைகளில் அழகானதை அணிந்து கொள்ளுங்கள். குறிப்பாகத் தொழுகை நேரங்களில், பெருநாள் தினங்களில், விசேட வைபவங்களின் போது மிக நல்லதை அணியுங்கள்.

10. பூமியில் உட்கார்ந்து சாப்பிடுவதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். கிடைப்பதைச் சாப்பிட்டுக் கொள்ளுங்கள். கொஞ்சமாக இருப்பினும் போதுமாக்கிக் கொள்ளுங்கள்.

11. வேலையாட்களுடன் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இது பெருமையிலிருந்து பாதுகாப்புத் தரும்.

12. எல்லை மீறிய புகழை ஒரு போதும் விரும்பாதீர்கள்.

13. பரிகாசமாக இருப்பினும் அருவருப்பான அசிங்கமான வார்த்தைகளைப் பேசாதீர்கள்.

14. கெட்ட விடயங்களில் ஈடுபடாதீர்கள், அது பற்றி பேசவும் வேண்டாம்.

15. உன் சகோதரன் முகம் சுளிக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டாம்.

16. நல்ல வார்த்தைகளை நாகரீகமான முறையில் பேசிக் கொள்ளுங்கள்.

17. அதிகம் பரிகாசம் புரியாதீர்கள். உண்மையே பேசுங்கள்.

18. மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் மீதும் ஏனைய உயிரினங்கள் மீதும் இரக்கம் காட்டுங்கள். அல்லாஹ் உங்கள் மீது அருள் புரிவான்.

19. உலோபித்தனத்தை விட்டொதுக்குங்கள் இதனை அல்லாஹ் வெறுக்கின்றான், மனிதர்களும் வெறுக்கின்றனர்.

20. நேரகாலத்துடன் தூங்கி அதிகாலை எழும்புங்கள். இது வணக்கத்திற்கும், முயற்சிகளுக்கும், தொழில் துறவுகளுக்கும் மிகச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பள்ளியில் ஜமாஅத்துத் தொழுகையில் கலந்து கொள்ளுவதில் தவறிழைத்து விடாதீர்கள்.

22. கடும் கோபம் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அப்படிக் கோபம் வந்துவிட்டால் ''அஊதுபில்லாஹி மினஷ்ஷைத் தானிர்றஜீம்'' எனக் கூறி அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்.

23. அமைதியைக் கடைப்பிடியுங்கள். அதிகம் பேசுவது ஆபத்தைக் கொண்டு வரும்.

24. அருள் மறை அல்-குர்ஆனை சிந்தனையோடு ஓதிக் கொள் ளுங்கள் பிறரை ஓத வைத்து காது தாழ்த்திக் கேளுங்கள்.

25. யாராவது மணம் (அத்தர்) தந்தால் தட்டி விடாதீர்கள், எல்லா நேரங்களிலும் மணம் பூசிக்கொள்ளுகள். குறிப்பாகத் தொழுகை நேரங்கள், குர்ஆன் ஓதும் வேளை, திக்ர் செய்யும் நேரங்கள், ஹதீஸ் மஜ்லிசுகள் என்பனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

26. அடிக்கடி மிஸ்வாக் செய்து (பல்துலக்கிக்) கொள்ளுங்கள். விஷேடமாகத் தொழுகை, திலாவத், திக்ர் நேரங்களில் மறந்து விடாதீர்கள்.

27. வீரனாக இருந்து கொள்ளுங்கள். உங்களுக்குப் பாதகமானதாக இருப்பினும் உண்மையே பேசுங்கள்.

28. எல்லாமனிதர்களிடமிருந்தும் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளுங் கள். அறிவுரைகளை எப்போதாயினும் தட்டிவிடாதீர்கள்.

29. உங்கள் மனைவிமார் மத்தியிலும், குழந்தைகள் மத்தியிலும் நீதமாக நடந்து கொள்ளுங்கள்.

30. மனிதர்களால் வரும் இன்னல்களுக்காக பொறுமை செய்து மன்னித்து விடுங்கள். அப்போது உங்களை அல்லாஹ் மன்னிப் பான்.

31. உனக்கு விரும்புவதனை உன் சகோதரனுக்கும் விரும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் அதிகம் ஸலாம் சொல்லுங்கள்.

33. நபியவர்கள் ஒருவரைச் சந்திக்கும் போது கற்றுத் தந்த "அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி வபறகாத்துஹு" என்னும் வார்த்தைகளைப் பிரயோகித்து வாருங்கள்.

34. உங்கள் உணவு, உடை, இடம் எல்லாவற்றிலும் சுத்தத்தைக் கடைப்பிடியுங்கள்.
சுத்தம், வெட்கம், சிக்கனம் என்பன மு..மினுடைய பண்புகளாகும்.

35. நபி (ஸல்) அவர்களின் சொல் செயல்களிலே முற்று முழுதாக நுழைந்து நபியுடைய சுன்னாவைக் கடைப்பிடியுங்கள். இதற்காக நபியவர்களின் சுபசோபனம் உண்டு.

சஹாபாக்களை நோக்கி நபியவர்கள் சொன்னார்கள், "நிச்சயமாக உங்களுக்குப் பின்னால் பொறுமையின் காலம் உண்டு. அக்காலத்தில் நீங்கள் கடைப்பிடிக்கும் வழி முறைகளைக் கடைப்பிடித்து வாழ்வோருக்கு உங்களில் நின்றும் ஐம்பது பேரின் நற்கூலி கிடைக்கும் எனச் சொன்ன போது, சஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரே! அவர்களின் நின்றும் ஐம்பது பேரின் நற்கூலியா எனக் கேட்ட போது, நபியவர்கள் இல்லை உங்களில் இருந்து ஐம்பது பேருடைய நற்கூலி கிடைக்கும் எனக் குறிப்பிட்டார்கள்.

யா அல்லாஹ் உனது திருமறையினை அடியொற்றி வாழ்வதற்கும், உன் திருநபியின் வழிமுறைகளைப் பின்பற்றி ஒழுகுவதற்கும் அவரை அன்பு கொண்டு அவரின் சபாஅத்தினைப் பெறுவதற்கும் அருள் பாலிப்பாயாக.

உணவுப் பொருட்களின் சுவை குன்றிய உண்மைக் காரணம்.

பாவங்கள் செய்யப்படுவதன் காரணமாக வணக்கத்தில் சோம்பலும், வாழ்வில் வறுமையும், சுவையில் குறைவும் ஏற்படும். அலி (ரழி) அவர்களின் அழகான அறிவுரை.

(ஆதாரம் - தாரிகுல்குலபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய கிராமத்தின் புதிய மத்ரசா.

ஈழத்திரு நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கருங்கொடியூர் அக்கரைப்பற்றின் கதிரவன் படுகரைப் புறத்தில் அம்பாரை வீதியில் இரண்டாவது மைல் கல்லில் வடபுறத்தே அமைந்துள்ளது எமது சிறு கிராமம்.

கிராமத்தின் கிழக்கே பட்டியடிப்பிட்டி என்னும் கிராமமும், வடக்கிலும், தெற்கிலும் தில்லையாற்றினால் சூழப்பட்டு மேற்குப் புறத்தே செந்நெற் காணிகள் பச்சைப் பசேலென பரந்து கிடக்கின்றது. கிராமத்தின் மத்திய பகுதியூடாக சேனநாயக்கா சமுத்திரத்தின் சிற்றோடையொன்று தவழ்ந்து செல்கின்றது. அதன் நீரைப் பருகி நிமிர்ந்து நிற்கும் மா, பலா, வாழை முக்கனிகளும், தென்னை மரங்களும் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் சிறுவயல் பரப்புக்களும் கிராமத்திற்கு அழகு சேர்க்கிறது.

அதிகாலை பாங்கொலியோடு ஆரம்பமாகும் கிராமத்தின் உதயம், பள்ளிவாசலை நோக்கி சாரிசாரியாகச் செல்லும் சனக் கூட்டத்தோடு ஆரம்பமாகும். இரைதேடிப் புறப்படும் பறவைக் கூட்டத்தின் ''கீச்'' ''கீச்'' ஒலியோடு பள்ளி செல்லும் மாணவர்கள் துள்ளிக் குதித்தோடித் தண்ணீர்ச் சுனைகளில் நீந்தி விளையாடும் காட்சி உள்ளத்திற்கு உவகையூட்டும்.

கிராமத்தின் மத்திய பகுதியிலே முத்தாக அமைந்துள்ள எமது ஜும்ஆ பள்ளிவாசல் அதனோடு இணைந்ததாக எமது குர்ஆன் மத்ரஸா பக்கவாட்டில் ஒரு சிறிய தபால் கந்தோர், எதிர்ப் புறத்தில் எமது பாடசாலை அல் பாயிஷா மகா வித்தியாலயம், இத்தனையும் அருகருகே அமையப் பெற்ற எமது கிராமத்திற்கு புது மெருகூட்டி ஒளி பாய்ச்ச உருவாக்கப்பட்டதே எமது ஹிப்ளு மத்ரசா.

அருள்மறை அல்-குர்ஆனை அழகாக உச்சரித்து இனிய குரலில் இறைவன் விரும்பும் முறையில் ஓதும் ஒரு மத்ரசாவின் தேவையினை உணர்ந்து; சென்ற 1995.07.01ல் இம் மத்ரசா ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தொழுகை முடிந்ததோடு ஆரம்பிக்கப்பட்ட இம் மத்ரசாவின் சுமார் 15 மாணவர்கள் திருமறையினை தஜ்வீத் முறைப்படி ஓதி மனனம் செய்யும் பாக்கியம் பெற்றார்கள். இதன் தொகை இன்று 24ஆக உயர்ந்துள்ளது. மாணவர்களின் பாடசாலைக் கல்விக்குப் பங்கம் ஏற்படாத வகையில் இம் மத்ரசாவின் நேரசூசி, பாடத்திட்டம் என்பன அமைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளமை இதன் விசேட அம்சமாகும். அரசாங்கப் பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கும் ஆண்டு 3 தொடக்கம் 12 வரையுள்ள மாணவர்கள் இங்கு அல்-குர்ஆனை மனனமிடுகின்றனர்.

பாடசாலை நாட்களில் அசர் தொழுகை முடிந்ததிலிருந்து இஷா வரும் வரையும் ஏனைய சனி, ஞாயிறு தினங்களில் முழு நேரமாக மாணவர்கள் பயில்கின்றனர். வெள்ளிக் கிழமைகளில் லீவு நாளாக உள்ளது. மாணவர்களுக்கு சிற்றுண்டி ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட இம் மத்ரசாவினால் கிடைக்கப் பெற்ற பயன்கள் அளப் பெரியன.

01. மாணவர்கள் அழகாக தஜ்வீத் முறைப்படி ஓதுவதற்குக் கற்றுக் கொண்டதோடு குர்ஆனைத் தங்கள் மனன சக்திக்குத் தகுந்தவாறு மனனம் செய்து கொள்கின்றனர்.

02. ஒரு கிராமத்தில் அல்-குர்ஆனை மனனம் செய்து கொண்ட ஒரு ஹாபிஸ் இருப்பது பர்ளுகிபாயாவாகும். இது நிவர்த்திக்கப்படாத போது ஊரில் உள்ள அனைவரும் குற்றவாளிகளாகி விடுகின்றனர். இம்மாபெரும் குற்றத்திலிருந்து இக்கிராம மக்கள் பாதுகாக்கப் பட்டுள்ளார்கள்.

03. பிள்ளைகள் அல்-குர்ஆனைத் திருத்தமாக தஜ்வீது முறைப்படி ஓதும் முறையினை கற்றுக் கொண்டதனால் பெற்றாரும் இது பற்றிய அறிவினைப் பெற்றுள்ளார்கள்.

04. வளர்ந்த மாணவர்கள் அழகாகத் தொழுவிக்கக் கூடிய பயிற்சியினைப் பெற்றுள்ளார்கள். விசேடமாக றமழான் காலங்களில் அழகான கிறாஅத்துடன் முழுமையான தொழுகையைத் தொழும் பாக்கியம் கிட்டுகின்றது. சிறிய சூறாக்களுடன் சடங்குகளுக்காக, கடுகதித் தொழுகை தொழும் தன்மை இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது.

05. திருத்தமாகவும் அழகாகவும் அதான் (பாங்கு) சொல்லும் பயிற்சினை அனைத்து மாணவர்களும் பெற்றுள்ளனர். இதனால் பள்ளிவாசல்களில் அதான் சொல்லும் முஅத்தின் அல்லது தொழுகை நடாத்தும் கதீப் நோய்வாய்ப்பட்டால் அல்லது வேறு அவசர வேலைகளால் லீவில் நிற்கும் போது மாணவர்கள் இப்பணியினை மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

06. பாடசாலையில் காலைக் கூட்டங்கள் ஏனைய விசேட நிகழ்ச்சிகளுக்குத் திருத்தமாகக் கிறாஅத் ஓதும் மாணவர்கள் தேடுகின்ற அவலம் போக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இங்கு குர்ஆனை மனனமிடுகின்ற அனைத்து மாணவர்களும் அதற்குத் தகுதியுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

07. எதிர் காலங்களில் இவர்களது சகோதரர்கள், இவர்களது குழந்தைகள் அல்-குர்ஆன் ஓதும் போது அதனை வழி நடத்தும் தகுதி பெற்றுள்ளார்கள்.

08. ஒவ்வொரு நாளும் பள்ளிவாசலில் காலை, மாலை வேளைகளில் அல்லாஹ்வுடைய கலாம் ஓதப்படுவதனால் ஊருக்கு வரும் ஆபத்திலிருந்து ஊர் மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

09. மிகவும் முக்கியமான விடயம் மாணவர்கள் வீணான விளையாட்டுக்கள், படம் பார்த்தல் போன்ற பாவங்களில் ஈடுபடும் சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றது. சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் நெறி பிறழ்வுள்ள குழந்தைகளுடன் சேர்ந்து கெட்டுப்போகின்ற பாரிய ஆபத்திலிருந்து மாணவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

10. உரிய நேரத்தில் ஜமாஅத்தோடு தொழுகின்ற பயிற்சி, அதிகாலை எழும்புகின்ற நற்பழக்கம், சந்தர்ப்ப துஆக்களை மனனமிட்டு ஓதிவருகின்ற அரிய நற்குணங்களையும் மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இம் மத்ரசாவின் ஒரு பகுதியாக அல்-குர்ஆனைத் திருத்தமாக ஓதுகின்ற அல்-குர்ஆன் மத்ரசா ஒன்றும் நீண்ட காலமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் இவ்வாறு ஆரம்பிக்கலாம்.

11. இவ்வாறான பகுதி நேர மத்ரசாக்களை உருவாக்குவதனால் மேலதிகமான பணச் செலவுகள், சுமைகள், நிர்வாகச் சிக்கல்கள் எதுவும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, இவ்வாறான மத்ரசாக்களை எல்லா ஊர்களிலும் அறிமுகம் செய்யலாம். ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் இவ்வாறு ஆரம்பிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிப்ளு மத்ரசாவின் ஆசிரியர்களும், நிர்வாகிகளும்.

ஹிப்ளு விரிவுரையாளர் : மௌலவி. ஹாபிழ். யூ.எம். மன்சூர் (மன்பஊி)(பலாஹி)

குர்ஆன் ஆசிரியர் : மௌலவி. ஏ. சித்தீக்

தலைவரும் இயக்குனரும் : மௌலவி. அல்-ஹாஜ். ஏ.எல்.எம். அஸ்றப் (ஷர்கி)

உபதலைவர் : எச். எல். அபூபக்கர்
செயலாளர் : எம். ஐ. மீராசாஹிபு
உபசெயலாளர் : அல்-ஹாஜ். ஐ. எல். சுபைர்
தனாதிகாரி : எம். எஸ். முஹம்மது முஸ்தபா
உறுப்பினர்கள் : அல்-ஹாஜ். கே. அப்துல் கபூர்
: எம். ஏ. ஹனீபா
: ஸற். ஏ. நிசாம்
: எம். ஏ. ஹாஜ் முஹம்மது
: எஸ். எம். யூசுப்

எமது ஹிப்ளு மத்ரசாவை சிறப்பாக நடத்துவதற்கு உங்கள் பூரண ஒத்துழைப்பு அவசியம். எல்லாப் பள்ளிவாசல்களிலும் இவ்வாறான ஒரு மத்ரசா உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது பேரவா! நிச்சயம் இதற்கு அல்லாஹ்வின் மேலான உதவி உண்டு.

உங்களுக்கும் இந்த ஹாபிழ்களின் சிபார்சு கிடைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இதற்கு நீங்கள் தரும் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும், உதவிகளும் தான்.

எமது மத்ரசாவின் கணக்கு இலக்கம்,
மக்கள் வங்கி,
இலக்கம் - 5181.

<u>உருவப்படங்களினால் உதாசீனப்படும் வீடுகள்.</u>

எந்த வீட்டில் நாய் வளர்க்கப்படுகின்றதோ இன்னும் உருவப்படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளனவோ அவ்வாறான வீடுகளில் (அருளைக் கொண்டு வரும்) மலக்குகள் நுழைவதில்லை. (ஹதீஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இப்புதிய மத்ரசாவின் வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்வினைக் கோடிட்டுக் காட்ட முடியும். அண்மையில் எமது நாட்டில் தேசிய ரீதியில் இடம் பெற்ற மீலாத் நிகழ்வின் போது இடம் பெற்ற அம்பாரை மாவட்டத்திற்கான கிறாஅத் போட்டியில் முதலாவது இடத்தை எமது மத்ரசா மாணவன் "ஏ.சீ.அப்ஹம்" அவர்கள் பெற்றுக் கொண்டார். இது எமது புதிய மத்ரசாவுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். அகில இலங்கை ரீதியாக இடம் பெற்ற போட்டியில் 4ஆவது இடத்தைப் பெற்றதும் இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

| மத்ரசா மாணவர்கள் விபரம் | | பாடசாலையில்கற்கும் ஆண்டு | ஜுஸுக்கள் முடித்துள்ளார்கள் |
|---|---|---|---|
| 01. | அப்துல் காதர் அப்ஹாம் | 12 | 30 |
| 02. | சுபைர் அப்துல் ஹாதி | 11 | 22 |
| 03. | கலந்தர் லெப்பை அகமட் சபீக் | 12 | 18 |
| 04. | அப்துல் மஜீட் முஹம்மது நஸ்வாத் | 11 | 18 |
| 05. | அப்துல் நஸீர் முஹம்மது ஆஷிக் | 11 | 15 |
| 06. | அப்துல் கபூர் அப்துல் றஊப் | 11 | 14 |
| 07. | அப்துல் கபூர் அப்துல் பாரிஸ் | 11 | 17 |
| 08. | அப்துல் நசீர் அப்துல் றஹ்மான் | 08 | 13 |
| 09. | சம்சுடீன் முஹம்மது றியாஸ்டீன் | 10 | 13 |
| 10. | பாறுக் சபீலுர் றசாத் | 09 | 13 |
| 11. | அஹமது லெப்பை முஹம்மது ஹசன் | 12 | 10 |
| 12. | முஹம்மது அஷ்ரப் ஹுஸ்னி முஹம்மது | 08 | 07 |
| 13. | முஹம்மது அஷ்ரப் இஹ்சான் முஹம்மது | 05 | 04 |
| 14. | முஹம்மது முஸ்தபா அப்துல் ஹபீழ் | 10 | 09 |
| 15. | அஸனார் பாஹிம் | 09 | 05 |
| 16. | அப்துல் கபூர் அஹமது ஸஜீர் | 09 | 03 |
| 17. | றஹ்மதுள்ளாஹ் அஹமது ஸாஜித் | 08 | 04 |
| 18. | ஹாசீம் அர்ஸாத் | 08 | 07 |
| 19. | முஹம்மது இப்றாஹிம் முஹம்மது மிஹாத் | 07 | 02 |
| 20. | அப்துல் கபூர் அகில் அஹமத் | 07 | 01 |
| 21. | முஹம்மது அலியார் சப்ரீன் | 05 | 01 |
| 22. | முஹம்மது அஷ்ரப் ஹஸ்ஸான் | 02 | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்று கிராமத்தை ஒளியூட்டி அலங்கரிக்கும் தாரகைகளான ஹாபிழ்கள்.

| | | |
|---|---|---|
| A.L. | அமீர் அம்ஜத். | மௌலவி. ஹாபிழ். |
| U.L. | மன்சூர். | மௌலவி. ஹாபிழ். |
| M.I. | றியாழ். | ஹாபிழ். |
| M.A. | அஸ்ஹர். | ஹாபிழ். |
| A.G. | சதாத். | ஹாபிழ். |
| M. | முபாறக். | ஹாபிழ். |
| A. | ஸித்தீக். | ஹாபிழ். |

இவர்களை ஈருலோக வெற்றி பெற்று நலமுடன் வாழ்ந்து இறை மறையை எட்டுத்திக்கும் மணம் பரப்ப வாழ்த்துகின்றோம்.

## எமது மத்ரசாவின் வளர்ச்சிக்கு பேருதவிபுரிவோர்.

1. அல்-ஹாஜ். எம். எஸ். ஹனீபா (றைவர்)

   ஒரு தண்ணீர் பம்பு 10,000/-
   ஒரு மின்விசிறி 5,000/-

2. அல்-ஹாஜ். ஏ. அப்துல் அஸீஸ் (யாழ்ப்பாணம்)
   மாண வர்களின் தேனீர் 10,000/-

3. அல்-ஹாஜ். ஏ. ஜெமீல் (JDM) (யாழுப்பாணம்)
   ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்கான சீருடை

4. வருடத்தில் ஒரு மாத சம்பளத்தை வளங்குவோர்

   1. அல்-ஹாஜ். A.L. உமர் லெப்பை
   2. அல்-ஹாஜ். M.M. பசீர் (சீசன்)
   3. அல்-ஹாஜ். L.T. சலீம்
   4. அல்-ஹாஜ். L.T. சுபைதீன்
   5. அல்-ஹாஜ். L.T. இஸ்ஸதீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின் அட்டையில் உள்ள படத்தின் விளக்கம்.

இருதயம், கண், காது என்பனவற்றின் குறுக்கு வெட்டு முகத்தோற்றங்களைக் கொண்ட அறபு எழுத்தணி; திருமறையின் ஒரு வசனமாகும். இதன் பொருள் பின்வருமாறு அமைகின்றது.

திட்டமாக ஜின்களிலும், மனிதர்களிலும் அநேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கின்றோம். (அவர்கள் எத்தகையோரென்றால்) அவர்களுக்கு இதயங்களிருக்கின்றன, அவற்றைக்கொண்டு (நல்லவற்றை) அவர்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள். அவர்களுக்குக் கண்களுமுண்டு (எனினும்) அவற்றைக்கொண்டு (இவ்வுலகிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை) அவர்கள் பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு காதுகளுமுண்டு, அவற்றைக் கொண்டு அவர்கள் (நல்லவற்றைச்) செவியேற்க மாட்டார்கள். அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்கள். ஏன் (அவற்றை விட) அவர்கள் மிக அதிகமாக வழி கெட்டவர்கள் அவர்களே தாம் (நம் வசனங்களை அலட்சியம் செய்து) பாராமுகமானவர்களாவர்.

(7 - 179)

வசனம் பின்வருமாறு அமைகின்றது. "லஹும் குலூபுன் லா எப்கஹுன பிஹா" (உள்ளம் இருக்கின்றது நல்லதை சிந்திக்கமாட்டார்கள்) இருதயத்தின் வெட்டுமுகத்தோற்றம். " வலகும் அஃயுனுன் லாயுப்சிறூன பிஹா" (கண்கள் இருக்கின்றன, நல்லதைப்பார்க்கமாட்டார்கள்) கண்ணின் வெட்டுமுகத்தோற்றம். "வலஹும் ஆதானுன் லாயஸ்மஊன பிஹா" (காதுகள் இருக்கின்றன. நல்லதைக்கேற்கமாட்டார்கள்) இவர்கள் ஆடு, மாடு, ஒட்டகை போன்றவர்கள். இதன் முகப்புத்தோற்றங்கள், இவர்களுக்கு நரகம் உண்டு எனும் கருத்தை இறுதிப்பகுதி நெருப்பு எரிவதன் மூலமாக சித்தரிக்கின்றது.

அடுத்து அமைந்துள்ள அறபு எழுத்தணி; நபியவர்களின் ஹிஜ்றத் நிகழ்வின் போது அவர்கள் மறைந்திருந்த"கௌர்" குகையினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

நபியவர்களும், அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களும் குகையில் இருந்த நேரத்தில் அபூபக்கர் (ரழி) அவர்கள் நபியைப்பார்த்து நாம் இருவர் தனியாக இருக்கின்றோம். எதிரிகள் பெரும் படை இதோ வந்து விட்டதே எனக்கூறிய போது ("இது ஹுமாபில் கார், லாதஹ்சன் இன்னல்லாஹ மஅனா") அந்த இருவரும் குகையில் இருந்த நேரத்தில் (நபியவர்கள்) நீங்கள் கவலைப்படாதீர்கள். அல்லாஹ் எம்மோடு இருக்கின்றான் என ஆறுதல் கூறி தைரியம் ஊட்டினார்கள்.

இதனையே இப்பாலைவனக் காட்சி சித்தரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வை வணங்கு அனைத்தும் கிடைக்கும்.

ஏ ஆதமுடைய மகனே! நீ என்னை வணங்குவதற்கு நேரத்தை ஒதுக்கு நான் உனது நெஞ்சத்தை கவலையை விட்டு நீக்கி குறைவற்ற தன்மையைக் கொண்டு நிரப்பி விடுவேன். வறுமையை உன்னை விட்டு விலக்கி விடுவேன். அவ்வாறு நீ செய்ய வில்லையானால், உன்னை பல்வேறு தொல்லைகளில் சிக்க வைத்து விடுவேன். நீ வறுமையை விட்டு தப்பவும் முடியாது.

இது அல்லாஹ் கூறியதாக அண்ணல் றசூல் (ஸல்) அவர்கள் கூறிய அன்பான மணிமொழியாகும்.

பாவமற்ற விசுவாசி.

ஒரு விசுவாசியுடன் ஆபத்துக்கள் தொல்லைகள், சிக்கல்கள் என்பன அவனுடைய உயிரோடும், பொருள்களோடும், மக்களோடும் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. இதே நிலையில் பாவங்களுக்குரிய தண்டனைகள் தொடர்ந்து கிடைப்பதனால் அவன் மரணிக்கும் போது எந்த விதப் பாவச் சுமையும் அவன் மேல் இருப்பதில்லை. (திர்மிதி)

உளத்துருவைப் போக்கும் உயர் மறை அல் - குர்ஆன்.

''விடயம் அவ்வாறல்ல அவர்கள் சம்பாதித்த தீமைகளினால் அவர்களுடைய இதயங்கள் துருப்பிடித்துப் போய்விட்டன. (83-14)

''தண்ணீர் பட்டால் இரும்பு துருப்பிடித்து விடுவது போன்று இந்த உள்ளங்களும் துருப்பிடித்து விடுகின்றன. என நபியவர்கள் கூறிய போது ''யாரசூலல்லாஹ்! அத்துருவைப் போக்குவது எது என கேட்கப்பட்டது" அதற்கு நபியவர்கள் ''அதிகமாக மரணத்தை நினைப்பதும் அருள் மறை அல்குர்ஆனை ஓதுவதுமாகும்" எனப் பதிலளித்தார்கள். இப்மொழியினை இப்னுஉமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (பைஹகி)

வல்ல அல்லாஹ்வின் உறவினர்கள்.

''மனிதர்களில் அல்லாஹ்வுக்குச் சொந்தமான சில உறவினர்கள் இருக்கின்றனர். என நபி (ஸல்) அவர்கள் கூறிய போது யாரசூலல்லாஹ்! அவர்கள் யார் என அன்புத் தோழர்கள் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள்; அவர்கள் குர்ஆன் உடையவர்கள், அவர்கள் தான் அல்லாஹ்விற்குரியவர்கள், அவனுக்குச் சொந்தமானவர்கள்" எனப் பதிலளித்தார்கள். இப்பொன்மொழியை அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நசாயி, இப்னு மாஜா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரீஎம் கோல்ட் ஹவுஸ்

அக்கரைப்பற்றில்........
தரமான தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான
நகைமாளிகை





# PTM GOLD HOUSE

*Main Street, Akkaraipattu.*
*Tel : 067-77231, 77434*

# AIWA GROUP

உள்நாட்டு. வெளிநாட்டு தொலைபேசி வசதிகள்
நடமாடும் தொலைபேசி வசதிகள் (Mobile)
பெக்ஸ் வசதிகள். போட்டோ பிரதி வசதிகள்

Computer Typesetting, Colour Bubble Jet Printing, Scanning, Laser Printing, Stencil Cutting Designing

T.V. Refrigerator, Table Fan, Iron Box, Gas Cooker, Clocks, Radio, Stand Fan, Ceiling Fan, Rice Cooker Blander

இங்கே :
a. Communication
b. Computer Unit,
c. Telesonic Unit

**AIWA GROUP**
**No: 04, Maraikkar Palace, Main Street, Akkaraipattu.**
**T. Phone : 067-77400, 77465**
**Fax : 067-77485, Hot Line : 063-24194**
**E-mail : aiwa@eureka.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Razeen Brother's

**Main Street, Akkaraipattu**

**Tel : 067-77292**

**HNB Building - A1A2**

வாகன,
கட்டிட பெயின்ட் வகைகள்

நீர் இறைக்கும் பம்பி, மோட்டார்
வகைகள்

மோட்டார் உதிரிப்பாகங்கள்

---

# MAJEED TRADERS

MAIN STREET, AKKARAIPATTU.

T. P. 067-77265, 77763

**General Merchents Politheen Items,
Retail Dealers.**

எம்மிடம் உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களும், பொலித்தீன் வகைகள், றெஜிபோம் பெட்டிகள், றெஜிபோம், மற்றும் சகல பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.மற்றும் (ரென்ட் சீலைகளும் வாடகைக்கு கொடுக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Agasa Enterprise

MAIN STREET, AKKARAIPATTU.
T.P : 067-77684, 77349

DEALERS IN
PLYWOOD SHEETS,
PLYWOOD DOORS, RANI,
KHOMBA, KHOMBABABY,
OLYMPIC, DIAMAND, PERLWAITE
SOAPS, PERLWAITE WASHING
POWDER, KHOMBA SHAMPOO &
GIFT ITEMS

# ஏ. ஏர். பிறதர்ஸ்

சலக விதமான அரிசி வகைகளும்,
அப்பிள் மார்க் உயர்ரக தேயிலை மற்றும்
பல சரக்குப் பொருட்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

# A.R. BROTHERS

POTTUVIL ROAD,
MARKET,
AKKARAIPATTU.
T. P. 067-78168


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BARAKATH TRADERS

DEALERS IN STATIONARY

104/1, DAM STREET,
COLOMBO -12

*Prop : A. Uwais (Haji)*


AZAM TRADERS


Old Moor Street,
COLOMBO.

*Prop : A. Azees (Haji)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org